THE COUNTRY HERALD.

கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | 1941 மே—விசு, சித்திரை—வைகாசி | இதழ் ௫

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

சார்பினாற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்.

(பெருந்தொகை) —கந்தழிவணக்கம்

சார்பினால் தோன்றாது, தான் அருவாய், எப்பொருட்கும் சார்பென நின்று, எஞ்ஞான்றும் இன்பம் தகைத்து (விளைவிப்பது); வாய் மொழியால் மெய்யால் மனத்தால் அறிவு இறந்த தூய்மை யதாம் (புடையது); மைதீர் (மாசிலாச்) சுடர் (சோதி).

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

1. ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்மந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

(நல்வழி)—ஔவை

ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ் ஆறு ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் ஏற்றவர்க்கு நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும் இல்லையெனமாட்டார் இசைந்து.

2. அ. துன்பத்திலாழ்ந்து கிடக்கும் ஏழைகளுக்கு ஒன்றுமுதவமாட்டாத யான் ஏன் பிறந்தேன்! ஏன் பிறந்தேன்!! ஆ! வீடில்லா ஏழைகாள்! உங்களை உலகம் பழிக்குமே யன்றி உங்களுக்குதவுவதில்லை......... கொடுமை புரியும் ஒவ்வொரு வகுப்பினராலுந் துன்புறுத்தப்பட்டுத் தம்மைப்பற்றிக் கவலையுறுவோரெவரு மின்றித் திண்டாடும் ஏழைகள் கதறுகின்றனர்; மற்ற எல்லாரையும் பாதுகாக்கும் ஒவ்வொரு சட்டமும், ஏழை மக்களுக்குப் பகையாகவே இருக்கிறது! ஈ தென்னே!!

Goldsmith.

ஆ. சண்டையே போடக் கூடாதென்று சொல்லவில்லை. நாம் சண்டைபோடுகிற எதிரியைப் பொறுத்ததே, நம்முடைய சண்டையின் நன்மையும் தீமையும். தீமையை எதிர்த்துப் போரிடுங்கள்; மனத்தையும் உடலையும் ஒருங்கே அடிமைப்படுத்தும் கெட்ட பழக்கவழக்கங்களை எதிர்த்துப் போரிடுங்கள்; சுயநலத்தை ஒழியுங்கள். இந்தச் சண்டைதான், நாம் போடவேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கும் நல்ல சண்டை.

(நல்வழி) தர்பர்.

3. கலையினால், உல கோற்றுமை காணுவாம்;
கலையினால் கருத்தைவிரி வாக்குவாம்;
கலைமகளின் கவின் பெருங் கோயிலில்,
கைகள் கோத்துக் களிப்புட னுடுவோம்;
விலையிலாமல் விரைந்திடுங் காலத்தில்
வியன்கலை விளை வேறிடச் செய்குவோம்;
நிலையிலா நதி நேரிய வாழ்க்கையை
நீண்ட காவியம் ஆக்குவோம் நேயரே!

(நாடகக்கலை) சுத்தானந்தபாரதி

3. தலையங்கம் :

தமிழ்மறை போற்றிவரும் வாழ்க்கை

(திருக்குறட் சாரம்)

வாழ்வதற்கேற்ற நாடு.

வல்லரணும் வாய்ப்புடைத்தாய மலையும் அதினின்று வருவதாய நீரும் மற்றும் நீர்வளமும் அமைந்ததாய், கேடறியாததாய், கெட்ட இடத்தும் வளம் குன்றாததாய், பிற தேயத்தாரும் விரும்பத்தக்க பெரும்பொருளும் விளைவுங்கூடியதாய், குடிகள் வருந்தித் தேடாமல் தானே அவர்களையடையும் (நாடே) செல்வவளத்தையுடையதாய், இறைப்பொருள் முழுவதையும் குடிகள் தாமே மனமுவந்து (ஒருங்கு) கொடுப்பதாய், மிக்கபசியும் தீராப்பிணியும், அழிபகையும் சேராது இயல்வதாய், பிணங்கித்திரியும் கூட்டங்களும் (பல்குழுவும்) உடனுறைந்தே பாழ்செய்யும் உட்பகையும் அரசையலைக்கும் கொலைகாரக் குறும்பரும் (கொல்குறும்பும்) இல்லாததாய், குறையாத விளைவைச் செய்வோரும் தாழ்விலாச் செல்வரும் அறவோரும் வாழ்வதாய், பகைவந்து இறுத்ததாலேனும் அரசு கோணியதாலேனும் உணவின்மையாலேனும் அலமரும் பிறநாட்டையும் தாங்குவதாய் இருக்கும் நாடே வாழ்வதற்கேற்ற நாடாகும்.

குடிப்பிறப்பு.

நல்லகுடியில்—வாய்மைக்குடியில், பிறத்தலும் வேண்டும். (நம் நாட்டின் குடியெல்லாம் வாய்மைக் குடியாதலும் வேண்டும். ப--ர்) அப்படி உயர் குடிப்பிறந்தார் மாட்டே, அன்பும் வாய்மையும் செப்பமும் ஒழுக்கமும் நாணும் இயல்பாக அமையும். அவரே, வறியாரை யிகழாது, அகமகிழ்ந்து, அவருக்கின் சொல் சொல்லியும், உள்ளனகொடுத்தும் உதவுவர்.

இல்லறச் சிறப்பு.

துறவிக்குத் தவம் தனிச்சிறப்பாயினும், அத்தவம் தனக்குற்ற துன்பத்தை (நோயைப்) பொறுத்தல், பிறருக்கிடுக்கண் செய்யாமையென்னும் சகிப்பினும் இன்மையினும் அடங்கி விடும். இல்வாழ்வான், அத்தகைத்தவஞ் செய்வாரையும் அவர் தம் நெறியின்கண் ஒழுகப் பண்ணி, தானும் தன்னறத்தில் நின்று, மனத்துக்கண் மாசு இலனாக, அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் இவை நான்கும் தவிர்த்து, பிறருக்குபகாரமாகவும் (ஒப்புரவு) வாழ்ந்தாக வேண்டுமாதலால், அத்தகைய இல்லறம் நோன்பாரின் நோன்மையுடைத்தாம். அவன், பழியஞ்சிப்பொருள் சேர்த்து, பிறருக்குக் கொடுத்தும் உண்பானாயின், வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனுமாவான்; வான் உறையும் தெய்வத்துள்ளும் வைக்கப்படுவான்.

கணவன் வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடையவளாய் (தற்கொண்டான் வளத்தக்காளாய்,) சோர்விலளாய், தற்காத்து, தற்கொண்டான் பேணி, இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற்காத்து (தகைசான்ற சொல்காத்து) கற்பென்னும் நிறை (திண்மை) யும் உண்டாகப்பெறின், பெண்ணின் பெருந்தக்க ஏதுமில்லை.

மாசற்றோரே அறவோர்.

மனத்துக்கண் மாசிலனாதலே (மாசு - இலன் - ஆதல்.) அறமாம். அம்மாசின்மையே தூய்மையுமாம்; அஃதும், வாய்மையாலேயே அமையும்.

பிறராக்கம் பொறாமையே அழுக்காறு; தன்னெஞ்சத்து அழுக்காறிலாததே ஒழுக்கம்.

அழுக்காறுடையான் கண் ஆக்கமுமில்லை; ஒழுக்கமிலான் கண் உயர்வுமில்லை.

அவ்வழுக்காறெனும் பாவி, நம் செல்வத்தையும் கெடுக்கும்; நம்மைத் தீயவழிகளினும் செலுத்தும். பிறருக்குக் கொடுப்பதைப் பற்றி அழுக்கறுப்பான் அவன் மட்டுமல்ல, அவன் சுற்றமும் உடுப்பதும் உண்பதுமின்றிக் கெடும்.

அவா நிரம்பாத (ஆரா) இயற்கைத்து; ஆதலால், அவாவுடையான் வாழ்க்கை என்றைக்கும் நிரம்புதலில்லை. அவாவில்லார்க்குத் துன்பமும் இல்லாததாகும்; அஃதுண்டேல், துன்பமும் இடையறுது வரும்.

சினம், சேர்ந்தாரைக்கொல்லி; அது, செல்லாவிடத்துந்தீது; செல்லிடத்து அதனில் தீயன பிற இல்லை. ஆகையால், எவனும் தன்னைத்தான் காக்கில், சினம்காக்க, காவாக்கால், அது தன்னையே கொல்லும்.

முகத்தாலினிது நோக்கி, அகத்தாலின் சொலின், அதுவும் அறத்தின்பாலதாம். அப்படி, எவர் மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொலவர்க்குத் துன்பமும் வறுமையும் இல்லாதொழியும்.

இப்படியாக, அழுக்காறு அவாவெகுளி இன்னுச் சொல்லாதிய மாசைக்கடிந்து, தன்னுலியன்ற அளவும், இடையறுது, செல்லும் வாயெல்லாம் செய்பவரே அறவோர்.

குணநலமே, சான்றோர் நலம்.

அன்பின் வழியதுயிர்நிலை. அன்புடையார் பிறருக்கென்புமுடையார்.

ஊணும் உடையும் உறக்கமும் அச்சமும் காமமும் உயிர்க்கெல்லாம் பொதுவாகும்; நாணுடைமை யொன்றே நன்மக்கட்குச் சிறப்பாகும். பிறருக்குவரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் ஒப்ப மதித்து நாணுவார் பெரியாராவர்.

பிறருக்குதவுதலின் சிறப்பு, உதவிவரைத்தன்று, அதனைப் பெறுபவர் வரைத்தாகும். பொருள் தேடுவதெல்லாம், பிறருக்குதவுதற் பொருட்டுமாதலால், தாம் செய்யத்தகுவனவற்றை யறிந்த அறிவுடையார் (கடனறி காட்சியவர்) செல்வம் சுருங்கிய காலத்தும், பிறருக்குதவத்தளரார். அக்கடப்பாடு, கைம்மாறும் வேண்டா.

தம் தொழிலுக்கும் கேடின்றி தயை செய்ய வல்லார்க்கே, இவ்வுலகம் உரியதாம்; அஃதில்லார், மண்ணேடியைந்த மரத்தினையொப்பர்.

பிறருக்குத் தீமை பயவாததும் குற்றமில்லாத (புரைதீர்ந்த) நன்மை பயப்பதுமே வாய்மையாகும். மனத்தொடு வாய்மை மொழிபவன், தவமும் தானமும் ஒருங்கு செய்வாரினும் சிறப்படைவான்.

இப்படியாக, அன்பும் நாணமும் கைம்மாறு கருதா உபகாரமும் (ஒப்புரவு) தயையும் (கண்ணேட்டம்) வாய்மையும் நிறைகுண (சால்பு) த்தின் தூண்களாகும். அச் சால்பு (Character) என்னும் திண்மையுண்டாகப் பெற்ற சான்றோர்க்கு, வறுமையாலும் இழிவில்லை. நல்லன வாய குணங்களெல்லாம் அவருக்கு இயல்பாம். அவர், பிறர்தீமை சொல்லா நலத்தவராகவும், கறுத்து இன்னுசெய்தார்க்கும் மறுத்து இன்னு செய்யாது இனியனவே செய்பவராகவும் விளங்குவார். பகைவரின் பகையை மாற்றுதற்கும் பணிதலையே படையாகக் கொள்வார். செருக்கால் (மிகுதியால்) தமக்குத் தீயவற்றைச் (மிக்கவை) செய்தாரையும், தம் பொறுமை(தகுதி)யாலேயே வென்று விடுவார். துன்பப் (இடுக்கண்) படினும் இளிவந்த செய்யார்; துன்பம் மிக வரினும், துணிவாற்றி, இன்பம் பயக்கும் வினையே செய்வார்.

முயற்சியின் திறம்.

முயற்சி யின்மை, நம்மை வறுமையில் புகுத்திவிடும்; முயற்சியோ, நம் செல்வத்தினை

யும் வளர்க்கும்; அதனால், நாம் விரும்பும் அதிகப்பயனைப் பெறமுடியாது போயினும், அதற்குரிய கூலியேனும் கிடைக்காது போகாது. ஆகையால், நாம் சோர்வு (உலைவு) இன்றியும் தாழாதும் போதிய அளவும் முயன்று வந்தால், நாம் விரும்பும் பயனையும் அடைதல் கூடும். நம் முயற்சி, தக்க பயன் தருதற்கு, நிரம்ப அறிவும் வேண்டும்.

அறிவின் ஆக்கம்.

மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு எப்பொருள் எத்தன்மைத்தாயினும் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதும் புலன்களின் வழியே (அவற்றிற் கடிமையாக. ப-ர்,) மனத்தைச் செல்லவிடாது தீயவற்றினீங்கி நல்லனவற்றின் கண் செலுத்துவதுமே அறிவாம். சிறப்பென்னும் செம்பொருள் காண்பது, இவற்றினும் சிறந்த அறிவாகும். அறிவறிந்து அடங்கப் பெறின், அவ்வடக்கம் சீர்மையும் பயக்கும்.

இன்னா சூழாமை.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணா செய்யாமை தலையாய அறமாகும். மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின், சூழ்ந்தவன் கேட்டை அறஞ்சூழும்.

இன்னா கூறாமை.

இன்சொல் இனிது ஈன்றல் காண்பான், வன்சொல் வழங்குவதேன்? தீயினாற் சுட்டபுண் ஆறும்; நாவினாற் சுட்ட வடுவோ ஆறாது. ஆகையால், யாகாவாராயினும் நாகாக்க; காவாக்கால், சொல்லிழுக்குப் பட்டு, தாமே துன்புறுவர்.

இன்னா செய்யாமை.

தீயவை தீயபயக்கும்; பிறர்க்கின்னா முற்பகல் செய்யில், தனக்கின்னா பிற்பகல் விளையும்; ஆகையால், நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான், தீப்பால பிறன்கட் செய்யற்க.

இன்னா செய்தார்க்கும்; அவர்நாண நன்னயஞ்செய்து இரண்டையும் மறத்தலே, அவரைத் தக்கவாறு ஒறுத்தலாம்; ஆதலால், இன்னாசெய்தார்க்கும், இனியவே செய்க.

செய்ந் நன்றி.

ஒருவர், கொன்றன்ன இன்னா செய்யினும், அவர்செய்த நன்றொன்று உள்ளக் கெடும். செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வேயில்லை. காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரிதாகும். பிறருக்கு நாம் ஒன்றும் செய்யாதிருக்க அவர் நமக்குச்செய்யும் உதவிக்கு, வையகமும் வானகமும் ஆற்றலரிது. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லதன்றே மறப்பது நன்று.

மன நலம்.

பிறர் பொருளைக் கள்ளத்தால் கள்வேமெனா, உள்ளத்தால் உள்ளலுந்தீது. பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ், வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பமாம். மனநலம் மன்னுயிர்க்கெல்லாம் ஆக்கம் தரும். உள்ளத்தால் வெகுளி உள்ளானெனின், உள்ளிய வெல்லாம் உடன் எய்தும். எண்ணியார், திண்ணியராகப் பெறின், எண்ணிய எண்ணியாங்கெய்துப.

இன நலம்.

மனநலம் நன்கு உடையாராயினும், இனநலம் ஏமாப்புடைத்து; எல்லாப் புகழுந்தரும்.

வினை செயல்.

எண்ணித்துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு. செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமை யானும் கெடும்.

நன்றிபயவாவினை நயவற்க. வாணிபம் செய்வார், வாணிபம் பேணி பிறவும் தம்போற் செய்க.

இதனை இதனால் இவன் முடிக்கும் என ஆய்ந்து, அதனை அவன் கண் விட. செய்வானை நாடி வினை நாடி காலத்தோடு எய்த உணர்ந்து செய்க.

பொருள் செயல்.

பொருளாக்கம், அன்பொடும் அருளொடும் வருதல் வேண்டும். திறன் அறிந்து தீதின்றிவந்த பொருள் அறம், ஈனும்; இன்பமும் ஈனும். களவினாலாகிய ஆக்கம், அளவிறந்து ஆவதுபோலக் கெடும்.

* அற்றார் அழிபசி தீர்த்தல், பொருள்பெற்ருன் பொருள் வைப்புழியாம். கொடுப்பதும் துய்ப்பதும் இல்லார்க்கு, அடுக்கியகோடி யுண்டாயினும் ஒன்றும் இல்லா தாகும். அவர் செல்வம், வெகு நலம் பெற்ருள் கன்னியாகக் கழிதற் போலாம்.

* அளவறிந்து வாழாதான் வாழ்க்கை, உளபோலத் தோன்றி, இல்லாகிக் கெடும். ஆதலால், ஆற்றின், அளவறிந்து ஈக; அது பொருள்போற்றி வழங்கு நெறி.

பெரியார் கேண்மை.

முகநக நட்பது, நட்பன்று; நெஞ்சத்து அகநக நட்பதே நட்பு. உடுக்கை யிழந்தவன் கைபோல, இடுக்கண்களைவதே நட்பு. குணமும் குற்றமும் குடிமையும் குன்ரு இனமும் அறிந்து நட்புச்செய்க; துன்பத்துள் துப்பாயார் நட்பைத் துறவற்க. சிறியவர் புன் கேண்மை எய்தலின், எய்தாமை நன்று; பண்பிலார் கேண்மை பெருகுதலின், குன்றலினிது. அல்லது அழச்சொல்லி இடித்து வழக்கறிய வல்லார் நட்பைப்பெறுக. குடிப்பிறந்து தன்கண் பழி நாணுவான் நட்பை, ஒன்றீத்தும் கொள்க; ஒப்பிலார் நட்பை, ஒன்றீத்தும் ஒருவுக. மறவற்க, மருவுக மாசற்ருேர் கேண்மை. அன்பின் வழிவந்த கேண்மையவர்—நட்டார், தமக்கு அழிவந்த செய்யினும், அன்பறுர்.

தாமே தம்மைத் திருத்த.

யாதனின் யாதனின் நீங்கியான், அதனின் அதனின் நோதலிலான். யான் எனதென்னும் செருக்கு அறுக்க. தன்னுயிர்க்கின்னுமை தானறிவான், என் கொலோ மன்னுயிர்க்கின்னு செயல்? தன்னின் மெலியார் மேற்செல்லுமிடத்து, வலியார் முன் தன்னை நினைக்க. ஏதிலார் குற்றம்போல், தங்குற்றங் காண்க. இடுக்கண் வருங்கால் நகுக; அதனை யடுத்தூர்வது, அஃதொப்பதில்.

சாதலினிதாகும் வாழ்க்கை.

சாதலின் இன்னுதது இல்லை; ஈதலியை யாக்கடை, அதுவும் இனிதாகும். புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலில், சாதல் அறங் கூறும் ஆக்கம் தரும்.

முடிவு.

தோன்றின், புகழுக்கேது வாய குணத்தொடு தோன்றுக; அஃதிலார், தோன்றலின் தோன்ருமை நன்று.

நம்மாகாணத்தின் நெல் விளைவையும் வியாபாரத்தையும் பற்றிய அறிக்கை, 1934.

C. R. SRINIVASAN

(சாரம் I)

நெற்சாகுபடியின் பரப்பும் அளவும்.

பிறநாடுகளில், நெல்விளையும் பரப்பும் நெல்லின் விளைவும் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. அவற்றில் பர்மோசாவிலும், (Formosa) இத்தாலியிலும், கொரியாவிலும், சப்பானிலும், அமெரிக்காவிலும் நெல்லின் அதிக விளைவு ஆச்சரியப்படும் படியாக இருக்கிறது. நம் நாட்டு மாகாணங்களில், நம் மாகாணம் பரப்பளவில் நாலாவது இடத்தையும் விளைவளவில் மூன்ருவதிடத்தையும்

பெற்றிருக்கிறது. பிறநாடுகள் பலவற்றிலும் பர்மா சியாம் (Siam) இந்துச்சீனு (Indo-China) நாடுகளின் விளைவையே நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். சியாமும், இந்துச்சீனுவும் பர்மாவும் அதிவேகமாக நெல்லின் விளைவை அதிகப்படுத்தி வருகின்றன. அதனோடு நிற்காமல், உலகமெங்கும் பர்மாவோடு நெல் வியாபாரத்தில் போட்டியும் போட்டு வருகின்றன. இம்மூன்று நாடுகளும், நம் மாகாணத்தில், ஏராளமாக நெல்லைக்கொண்டுவந் திறக்குகின்றன.

நம் மாகாணத்தின் சனத்தொகை அதிகமாக இருப்பதால், நம் மாகாணத்தில் விளையும் நெல் நம் மாகாணத்திற்குப் போதியதாக இருக்கிறதில்லை. நெல்லிற்கும் மழை அவசிய மென்றுலும் நெல்லைத் தவிர்த்த மற்றும் பல தானியங்கள் அனேகமாக வானுவாரியாக விளையவேண்டிய திருப்பதால், அவற்றிற்கு மழை பின்னும் அதிக அவசியமாகிறது. மழை குறைந்திட்டாலும் காலாகாலத்தி வில்லாது போனுலும் பல தானியங்களின் விளைவு வெகுவாகக் குறைந்து போகிறது. அப்படிக் காலங்களில், நெல்லின் தேவை பின்னும் அதிகமாகிறது. பர்மா சியாம் இந்துச் சீனு நாடுகளில் ஏராளமாக விளைந்து மீந்தும் நெல் வெளி நாடுகளில் போய்த்தான் செலவாக வேண்டியதிருப்பதாலும், கடல்வழியே கொண்டுபோய்ச் செலவிடுவதென்றுல் செலவும் சிரமமும் குறையுமாதலாலும், அது நம் மாகாணத் துறைமுகங்களில் கொண்டுவந்து குவிக்கப்படுகிறது. அதனுல், நம் நாட்டில் விளையும் நெல்லுக்கும் நல்ல விலை கிடைப்பதில்லை.

நம் மாகாணத்தில் சாதாரணமாக நெல் எட்டுக்கோடி டன்னு (Tons) க்கும் கொஞ்சம் குறைவாகவே விளைகிறது; பல தானியங்கள் நாலு கோடி டன்னுக்கும் கொஞ்சம் அதிகமாகவே விளைகின்றன. நம் மாகாணத்தின் நெல் விளைவும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. 1918—23 வருடங்களின் சராசரியைக் காட்டிலும் 1923—28 ம் வருடச் சராசரி இலட்சத்து நாற்பத்தையாயிரம் டன் குறைந்திருக்கிறது. 1928—33 ம் வருடங்களின் சராசரியோ நாலு இலட்சத்து பதின்மூவாயிரம் டன் கூடியிருக்கிறது. இப்படியாகக் கூடுகிற காலத்தில் நெல்லின் தேவை குறைந்தும், குறைகிறபோது நெல்லின் தேவை அதிகமாகியும் வருகிறது.

நம் மாகாணத்தில், நெல் அறுப்புக்காலங்களும் இடத்துக்கிடம் மாறுகின்றன. வட சருக்காரில், அக்டோபர் மாத முடிவில் குறுகியகால முதற் போகமும் டிசம்பர் முதற் பாதியில் சம்பா இரண்டாம் போகம் அல்லது நீண்டகால முதற் போகமும் ஏப்பிரல் மே மாதங்களில் குறுகிய கோடை மகசூலும் நெல்லூரில் சனவரி பிப்பிரவரி மார்ச்சு மாதங்களில் நீண்டகால முதற்போகமும் மே மாதத்தில் குறுகியகால கோடை மகசூலும் அறுவடையாகின்றன. தென் சில்லாக்களில் சனவரி பிப்பிரவரி மாதங்களில் ஒரு மகசூலும் செப்டம்பர் அக்டோபரில் ஒரு மகசூலும் அறுவடையாகின்றன. மத்திய சில்லாக்களில் மேற்கண்டபடி தென் சில்லாக்களைப்போல அறுவடையாவதோடு, மே சூன் மாதங்களிலும் அறுவடையாகின்றன. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப, பலவேறு வகை நெற்கள் விளைவிக்கப்படுகின்றன. கஞ்சத்திலும் மலையாளத்திலும் நெல் வகைகள் அதிகம்.

(தொடரும்)

5. கூட்டுறவு :

சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை

VIII

கூட்டுறவியக்கம் புத்துயிர் பெறுமா?

பதினாயிரம் சங்கங்களில், எண்ணாயிரம் சங்கங்களுக்குமேல் கெட்டிருக்கின்றன. ஐந்திலிரண்டு கெட்ட சங்கங்களாக இருந்தால், ஐந்திற்கிரண்டு பழுதில்லை யென்கலாம்; அப்படியில்லை. ஐந்தில் நாலுக்குமேல் கெட்டிருக்கிறதென்றால் நாம் என்ன சொல்லுவது? அனேகம் மீளக்கூடிய எல்லையையும் கடந்துவிட்டன; பிறவற்றைத் திருத்தவும் இந்தக் கழகயோசனைகள் போதா.

இனிக் கொடுக்கும் கடன்களேனும் சரிவர வசூலாகுமா?

விபசாயம் மிச்சம் தரும் முயற்சியாக இல்லை. அனேகருக்கு, அதனை விட்டால் வேறு புகலுமில்லை. அதன் வரவிற்குத் தக்கதாக, அவர்கள் செலவை சுருக்கிக் கொள்ளவும் முடியவில்லை. முன் வாங்கியிருக்கும் கடன்கள் அனேகத்திற்கு, வட்டிகூடச் சரியாகச் செலவாகி வரமுடியவில்லை. இந்த நிலைமையில், கடன் அதிகமாகிக்கொண்டும் வருகிறது. வர வேண்டிய கடனை நெருக்கினால், கூட்டுறவுச் சங்கமும் பாங்கும் நிலங்களைத்தான் ஏலத்திலெடுத்துக்கொள்ள வேண்டியதாக முடிகிறது. நிலவருமானம் அவை செலுத்திவரும் வட்டிக்குக் கூடக் காண்கிறதில்லை. இப்படி யிருந்தால், கடன்கள் எப்படிச் சரிவர வசூலாகக்கூடும்? அனேகக் கடன்கள் இப்படி நின்றுபோனால், மென்மேலும் கடன் கொடுத்து வரவேணும் முடியுமா?

விபசாயிகளின் நிலைமை இப்படி அதிகமாகக் கெட்டு வருவானேன்?

விபசாய விளைபொருள்களின் விலை, பத்து வருடங்களுக்குமுன், நூறாக இருந்ததென்றால், இப்பொழுது ஐம்பத்தைந்தாக இருக்கிறது. மணமார்த்தச் செலவுகளோ தசகூலிச்செலவுகளோ குறையவில்லை; அதிகமாகியுமிருக்கின்றன. நாற்பது வருடங்களுக்கு முன் நம் மாகாண நிலவரி நாலுகோடி ரூபாவாக இருந்தது; இப்பொழுது ஏழரைக் கோடி ரூபாவாக இருக்கிறது. முன்னால் விபசாயிகளுக்கு ஆடம்பர உல்லாசச் செலவுகளிருந்ததில்லை; இப்பொழுது அவற்றிற்கும் குறைவில்லை. வெளி நாட்டுச் செய்பொருள்கள் பல இல்லாமல் தீராதென்றாகிவிட்டன. அவற்றின் விலைகளும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகின்றன. உழைப்பும் விளைவும் முன்னிலும் குறைவு; ஆனால், விபசாயத்தைச் சார்ந்திருப்பவர்களோ முன்னிலும் அதிகம். இப்படியாக, விபசாயிகளுக்கு கேடுகள் மிகுந்துவர, அவர்களுடைய நிலைமை அதிகமாகக் கெட்டு வாராதென் செய்யும்?

விசாரணைக்கழகம் இக்கேடுகளை நீக்க யோசனை சொல்லுகிறதா?

துண்டு துண்டாகச் சிதறிக் கிடக்கும் நிலங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்படவேண்டுமென்று சொல்லுகிறது. அப்படிச் சேர்ப்பதால் கொஞ்சம் பிரயோசனமிருக்கலாம்; ஆனால் அப்படிச் சேர்க்கமுடியவில்லை. விளைபொருள்களையெல்லாம், கடன் விற்பனைச் சங்கங்களின் மூலமாக, நல்ல விலைக்கு விற்கலாமென்று சொல்லுகிறது. ஆனால், அப்படி விற்று இலாபமடைய வருவாரில்லை. நல்ல விதையாக விதைக்கலாம், உரமிடலாம், அதிக விளைவைக் காணலாமென்று சொல்லுகிறது; ஆனால், அதிக விலை கிடைப்பதற்காக அரசாங்கம் செய்யவேண்டிய உதவிகளின்னின்னவற்றைத் தவறாது செய்து தரவேண்டுமென்பதா

கச் சொல்லவேயில்லை, விவசாயிகளுக்குதவக் கூடிய அரசாங்க அதிகாரிகளெல்லாம், தாங்களாகக் கலந்தும் விபசாயிகளோடு கலந்தும், அவர்களுக்கு வேண்டியனவெல்லாம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறது. இப்படியாக, கழகம் சிபார்சு செய்யும் மேலளந்த வாரியான யோசனைகளுக்குக் கணக்கில்லை; ஆனால், நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடியதான புள்ளி விவரங்களோடு கூடிய திட்டவட்டமான யோசனை யெதுவுமேயில்லை.

இந்த நிலைமையிலும் கூட்டுறவியக்கத்தை வளர்ப்பதா?

பசுவின் வாலும் வளரத்தான் செய்கிறது; ஆனால், அது கீழ்நோக்கியே வளருகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை கூட்டுறவாளர்களின் எண்ணிக்கை அதிகமாவதால் மட்டும், பயனில்லை. கூட்டுறவாளர்களின் நிலைமையும் செம்மையாகி வரவேண்டும்; அவர்களுடைய கடன்கள் குறையவேண்டும்; மிச்சம் அதிகமாக வேண்டும். அப்படிக்கில்லாத வளர்ச்சியால், கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமையும் இன்னும் அதிகமாகவே கெடும். பாங்குகளும் கூட்டுறவாளர்கள் நிலங்களை இன்னும் அதிகமாக ஏலத்திலெடுத்து வைக்கலாம்; அரசாங்க விபசாயப்பண்ணைகள் மாதிரி, கூட்டுறவு விபசாயப்பண்ணைகளும் நடந்து வரலாம்; ஆனால் அதனால் பாங்குகளின் பொருளாதார நிலைமையும் பாதிக்கப்படவே செய்யும்.

தண்ணீரில் முழுகிப்போக இருக்கிறவனையும் நாம் சாக்கிரதையாக இருந்து கொண்டு, குடுமியைப் பிடித்திழுத்து வந்து, கரையில் சேர்க்கலாம். அப்படிச் செய்யாது, நம் காலையே அவன் கைப்பிடிக்குக் கொடுத்து விட்டால், அவனைத்தான் — ஆத்திரக்காரனை நாம் குற்றஞ்சொல்லலாமா? குற்றஞ்சொல்லித் தானுவதென்ன?

கடன் பட்டவரும் தம் வயிற்றுக்கிரை போட்டாக வேண்டும்; தம் பெண்சாதி பிள்ளைகளைக் காப்பாற்றியாக வேண்டும். இப்பொழுது விபசாயமிருக்கும் நிலைமையில் விளைந்தால் வட்டி வாசி கொஞ்சம் கொடுத்துத் தீர்க்கலாம்; தசகூலிக் கடன்களைக்கூடப் பூராவாகக் கொடுத்துத் தீர்ப்பது சிரமப்படுகிறது. விளையவில்லை யென்றால், அவர்களைத் தான் என்ன செய்வது?

அரசாங்கம் அன்னியர் அரசாங்கமாக இருக்கும்வரை, நம்முடைய பொருளாதார நிலைமையை நாம் செம்மைப் படுத்திக்கொள்ள முடியாதென்று சொல்வதற்குமில்லை. நாமாகச் செய்து கொள்ளக்கூடியவற்றையும் செய்து கொள்ளாமல், அப்படிச் சொல்லுவதற்கு நமக்கு வாயும் கிடையாது. நம்முடைய பொருளாதார நிலைமை விருத்தியானால், அவ்வன்னியர்களடையக்கூடிய இலாபம் மாதிரி, இப்போதைய நிலைமையில் அவர்கள் அடையக்கூடியதில்லை; நம்மிடம் சத்திருந்தால் தானே அவர்கள் நம்மை உறிஞ்சிக்கொண்டிருக்க முடியும்; ஆகையால், தங்கள் நன்மையை உத்தேசித்தேனும், அவர்கள் நம்மைக் கைதூக்கிவிடவேண்டிய நிலைமையிலேயே இருக்கிறார்கள்.

எப்படியும், விபசாய மிச்சத்தை அதிகப்படுத்தாமல்—அதாவது, விபசாயக் கூட்டுறவாளர்களின் திரும்பச் செலுத்தக்கூடிய சத்தியை அதிகப்படுத்தாமல்—அவர்களுடைய சத்திக்கு அதிகமாகவேனும் அல்லது அதைப் பற்றிய கவனமேயில்லாமலேனும் அவர்கள் கடனை அதிகப்படுத்திவருவதால், எவருக்கும் கடன் கொடுக்கிற சங்கங்களுக்கும் அவற்றிற்குக் கொடுக்கும் பாங்குக்கும் பெருங்கேடே விளைந்திடுமென்பதில் சந்தேகமில்லை. நிகர நிலவருமானத்திலிருந்து, குடும்பச் செலவுகளுக்கும் வேறு நிர்ப்பந்தக் கடன்களுக்கும் போக மீந்துமென்றால், அப்படி மீந்துவதையே திரும்பச் செலுத்தக்கூடிய சத்தியாகக் கொள்ளலாம்.

(தொடரும்.)

6. கல்வி:

ஆரம்பப்பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புகள்

Notes for Teachers on the Syllabuses for Elementary Schools.

(சாரம் I)

வகுப்பு ஆசிரியர்.

ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய ஆசிரியரே அவ்வகுப்பின் எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டும். அவ்வகுப்பாசிரியர் ஒரு பாடமும் இன்னொரு வகுப்பாசிரியர் இன்னொரு பாடமுமாகக் கற்பித்தல் கூடாது. அப்படிக் கற்பிப்பதால், ஒருவர் கற்பிப்பதையே இன்னொருவரும் கற்பிப்பதாக, திரும்பத்திரும்பக் கற்பிப்பதாக முடியலாம்; ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலும் போகலாம். எப்படியும் முயற்சி சிறிதளவேனும் பயனற்றதாகமுடியும். ஒரு ஆசிரியரே இரண்டு மூன்று வகுப்புக்கள் சேர்த்து நடத்துவதாயிருந்தாலும் அவரே எல்லாப் பாடங்களையும் கற்பிக்கவேண்டும்.

ஒரே ஆசிரியர் பல பாடங்களையும் கற்பிப்பதென்றால், எந்தப் பாடத்தையும், திரும்பத் திரும்பக் கற்பிக்காமலே பல பாடங்களையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தியும், பள்ளிக்கூட நேரத்தை வீணாக்காது அதனைப் பல பாடங்களுக்கும் செட்டாகப் பயன்படுத்தியும் வரக்கூடும்.

ஆரம்பப் பள்ளியில் உயர்தரப் போதனை முறைப்பயிற்சி பெற்றவர், அனேகமாக ஒருவராகவே இருக்கக்கூடுமாதலால், அவரே பல வகுப்புகளுக்கும் அங்கிலம் கற்றுக் கொடுக்க வேண்டியதாக நேரும். அப்படிச் சந்தர்ப்பத்திலும், அந்த வகுப்பு ஆசிரியர் அங்கில ஆசிரியர் வகுப்புக்குப் பிற பாடங்களோடு அதிக சம்பந்தமில்லாத ஒரு பாடத்தையே கற்பிக்க வேண்டும்.

கற்பிக்கும் பாடங்கள்.

கற்பிக்கும் பாடங்களைக் கட்டாயப்பாடங்களென்றும் சௌகரியம்போல் சொல்லிவைக்கக் கூடிய பாடங்களென்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். கட்டாயப் பாடங்களுக்குப் பாடத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது; மற்றப் பாடங்களில், சங்கீதத்திற்கு மட்டும் பாடத்திட்டம் இருக்கிறது. கட்டாயப் பாடங்களைச் சரியாகப் போதித்து வருகிற பள்ளிகளிலும், மற்றப் பாடங்கள் கற்பிப்பதற்குப் போதிய சௌகரியமிருந்தால் மட்டும், அவற்றைக் கற்பிக்கலாமென்று இருப்பதால், அப்படிக் கற்பிக்கும்பொழுது, அந்தப் பள்ளிகள் அதற்கேற்ற பாடத்திட்டத்தையும் வகுத்துக் கொள்ளலாம்; அப்படி வகுக்கும் பாடத்திட்டத்திற்கு மேற்பார்வை அதிகாரிகளின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

பாடத்திட்டம்.

1. பிள்ளைகளின் திறமை, 2. தேகதிடம் மனோதிடம் சமுகவாழ்க்கை, 3. வயது முதிர்ந்தோர் தேவைக்காகத் தயார் செய்தல் என்பதான மூன்று அம்சங்களையும் கவனித்துப் பாடத்திட்டம் தயார் செய்யவேண்டும்.

பிள்ளைகளின் திறம்.

பிள்ளைகள் பலவேறு திறமுடையவர்களாகப் பள்ளிக்கூடம் வந்து சேருவார்கள். பாடத்திட்டம் சராசரி திறத்திற்கு மேற்பட்டவர்க்கே ஏற்றதாக இருத்தல் கூடாது. சுமாரான புத்திசாலித்தனத்தோடு கூடிய பிள்ளைகள் ஒரு சாதாரண கால அளவிற்குள்ளும்

மற்றும் திறமை குறைந்த பிள்ளைகள் கொஞ்சம் கூடிய காலத்திலும் பயின்று கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். அப்படித்திட்டம், பிள்ளைகளுக்குத் தங்கள் படிப்பில் அக்கறை ஊட்டக்கூடியதாகவு மிருக்கவேண்டும். அவர்களுக்கு முதலில் அக்கறை குறையவும் பிறகு பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காக வராதிருக்கச் செய்யவும் பின் பள்ளிக்கூடத்திற்கு வராமலே நின்றுவிடச் செய்யவும் கூடியதாக இருக்கக்கூடாது.

பிள்ளைகளின் தேகதிடம் மனோதிடம் சமுகவாழ்க்கை.

இப்பொழுது பையன்களெல்லாம் ஆறு வயதாகவும் பெண்களெல்லாம் ஐந்து வயதாகவுமே பள்ளிகளில் சேர்ப்பதால் கீழ் வகுப்புக்களிலேனும் எல்லாம் ஒரேதரப் பிள்ளைகளாக வந்து சேருவார்கள். அவர்களுடைய தேகதிடம் கிட்டத்தட்ட ஒன்றுபோலிருக்குமாதலால், அவர்களுக்கு அதைப்பற்றிய பயிற்சி தருவதிலும், மனப் பயிற்சியும் மற்றப் பாடப் பயிற்சியும் தருவதைப்போல் அத்துணை சிரமமிருக்காது. கீழ் வகுப்புக்களில் பிள்ளைகளின் திறமை பலவேறு தரப்பட்டதாக இருக்குமாதலால், பாடத்திட்டம் சுமாரான பிள்ளைக்குச் சௌகரியமாக அமைத்தால், பேர்பாதிப் பிள்ளைகள் அதைப் பின்பற்றுவது வெகு சிரமப்படும். ஆகையால், அதற்கும் கொஞ்சம் குறைவாகவே அமைக்கவேண்டும்.

பிள்ளைகளைச் சமுக வகையாகப் பார்க்கும் போது, அவர்களுடைய தேக அமைப்பிலும் திறமையிலும் பார்வையிலும் வீட்டு நிலைமை சுற்றுப்புறத்தை ஒட்டியும் பல வேறு வகைப் பட்டனவாக இருக்கலாம்; ஆகையால், பிள்ளையின் பலவேறு அக்கறைகளையும் போக்குகளையும் அனுசரித்ததாகப் பள்ளிக்கூட வேலைகள் இருக்கவேண்டியதவசியமாகும். ஆசிரியர், அவற்றைக் கவனித்து, அவற்றிற்கேற்ப, தன் முறையை அமைத்துக்கொள்ளவேண்டும். பிள்ளைகளின் சமுகவாழ்க்கையே அவர்களைப் படித்து வரும்படி தூண்டிக்கொண்டுபோவதாக இருக்கவேண்டும்.

கொஞ்சம் யோசனையாக வேலைசெய்தால், பள்ளிக்கூட வேலைகளிலனேகத்தைப் பிள்ளைகளின் இயற்கைப் போக்கிற்கு அனுசரித்ததாக்கிக்கொள்ளலாம். கூடியவரை, செய்முறையை (Project method) பாடத்திட்டத்தைக் கற்பிப்பதற்கு உபயோகித்து வரவும் கூடும்; அப்படி உபயோகித்து வரவும் வேண்டும்.

முதியோர் வாழ்க்கைக்குத் தயார் செய்தல்.

இது தொழிற் பயிற்சிக்கு (prevocational) த்தயார் செய்தலென்றும் அறிவுத் தேவைக்கு (academic needs) த்தயார் செய்தலென்றும் இருவகைப்படும். பிள்ளைகளை, வாழ்க்கையின் எல்லாத்தேவைக்கும், பள்ளிகளில் தயார் செய்திடக்கூடியதில்லை. பூரணத் தொழிற்பயிற்சி, ஆரம்பப் பள்ளியில் சாத்தியமாகக்கூடியதில்லை; என்றாலும், கண் பார்க்கக் கை செய்யும் பயிற்சியும், பண வரவு செலவும், சில்லறையாகச் சரக்கு வாங்குதலும், காரியமான கடிதப் போக்குவரவும் ஒவ்வொருவரும் அவசியம் பழகவேண்டியதுண்டு; அவற்றிற்குப் பாடத்திட்டமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

பின் முதியோர் வாழ்க்கை அறிவுத்தேவையைக் கணக்கு சம்பந்தமாக, வெகுவாக நூறுக்குட்பட்டும், ஏகதேசம் ஆயிரம்வரைக்குமிருப்பதாகக் குறிக்கலாம்; ஆகையால், மூன்றுதானக் கணக்குகளே அவர்களுக்கு விரைவாக உதவும்படி பழக்கவேண்டும்; அதற்கு மேற்பட்டு இலேசாகத்தெரிந்தாலும் போதும்.

பொதுவாக, பிள்ளைகள் கற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கே சொல்லிவைக்கவேண்டும். அதிகவிரைவாகச் சொல்லிவைப்பதால், அதனை ஏற்றுக்கொள்ளுவதற்கு அதிகத்தாமதமுமாகும்; ஆதலால், அப்படிச்சொல்லிவைக்கக்கூடாது. அவர்களுடைய தினசரி வாழ்க்கையில், அவர்களுக்குப் பயன்படுவனவும், ஆதலால் அவர்களுக்கு இப்பொழுதே அக்கறை ஏற்பட்டிருப்பனவும் கற்பிக்கப்படவேண்டும். பிற்காலத்தில், எவருக்கும் திட்டமாக உதவக்கூடியனவெல்லாமும் கற்பிக்கப்படவேண்டும். (தொடரும்.)

7. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை.

அ. சைவ உணவே முதல்தர உணவு

Dr. Abbot M. D.

(சுருக்கம்)

"சென்ற பெரிய சண்டைக் காலத்தில், நேச தேசங்கள் நியமித்த ஒரு விஞ்ஞான சாத்திரக் கழகம், ஒவ்வொரு போர் வீரனுக்கும் இவ்வளவு கனலி கொழுப்பு உயிர்ச்சத்து கிடைக்க வேண்டுமென்றெல்லாம் அளவு குறித்தது. ஆனால், பிசிதத்திற்கு (Protein) மட்டும் அது அளவு குறிக்கவில்லை. ஏனென்றால், ஒரு ஆகாரக் கிரமத்திலே போதுமான அளவு கொழுப்பு இருக்குமானால், அதில் கட்டாயம் போதுமான அளவு பிசிதமும் இருந்தேயாக வேண்டுமென்பது அந்தக் கழகத்தின் கொள்கை. இந்தக் கொள்கை நூற்றுக்கணக்கான அமெரிக்கா ஆகாரக்கிரமங்களைப் பரிசோதித்ததில் உறுதியுமாயிருக்கிறது. எந்தெந்த ஆகாரக்கிரமத்திலெல்லாம் போதுமானபடி கொழுப்பு அல்லது சத்தி இருந்ததோ, அதிலெல்லாம் போதுமானபடி பிசிதமும் இருந்தது.'' என்று பண்டிதர் செர்மன் சொல்லுகிறார்.

அவர் மேற்கொண்டும் சொல்லுவதாவது: "ஆகாரத்திற்கும் தேகாரோக்கியத்திற்குமுள்ள சம்பந்தத்தை நாம் நன்றாக அறிய வேண்டுமென்றால், ஒரு காரியத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அது என்னவெனில், பிசிதச்சத்து காய்கறிகளிலும் மாமிச பதார்த்தங்களிலும் ஏராளமாக இருக்கிறது. மற்ற வகைகளிலெல்லாம் திருப்திகரமான ஒரு உணவுத் திட்டத்தில் பிசிதம் குறைவாக இருக்கவே இருக்காது, இருக்க முடியாது. நம்முடைய ஆகாரத்திலே போதுமானபடி உயிர்ச் சத்துக்களும் கனியவுப்புக்களும் இருக்கின்றனவா என்பது தான் முக்கியமான கேள்வி. அவை இருந்தால், பிசிதம் போதுமானபடி இருந்தே யாக வேண்டும். அதற்குச் சந்தேகமே இல்லை.

முன்னெல்லாம் பிசிதம் போதுமானபடி இருக்கிறதா என்று முதலிலே பார்ப்பார்கள். இப்பொழுது உயிர்ச் சத்துக்களும் கனியங்களும் போதுமானபடி இருக்கின்றனவா என்பது முக்கியம். அவை இருந்தால், மற்றவற்றைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதேயில்லையாம். இது விஞ்ஞான சாத்திரிகள் புதிதாகக் கண்டு பிடித்துள்ள உண்மைகளுள் மிகவும் முக்கியமானதொன்று. இந்த உண்மையை இன்னும் பலமாக நிரூபணம் செய்ய வேண்டுமென்கிற அவசியமில்லை. அவசியமானது என்னவென்றால், நாம் அதை உலகறியச் சொல்லவேண்டும், எங்கும் பிரசாரம் பண்ணவேண்டும்; இதுதான் அவசியம்.

பழங்கள், காய் கறிகள், பால், இந்த மூன்றும் சேர்ந்த உணவுத் திட்டத்தைத் தற்கால வைத்திய சாத்திரம் காப்புணவு, அதாவது, வியாதி வராமல் பாதுகாக்கக்கூடிய உணவு என்று சொல்லுகிறது. இது நீண்ட ஆயுள், தேகதிடம், பலம், சகிப்புத்திறன், நோயின்மை ஆகிய நலன்களுக்கு அத்தியாவசியமாம். ஏன், சிற்சில நல்லொழுக்கங்கள் அமைவதற்குக்கூட, இஃது அவசியமெனத் தெரிகிறது.

நமது ஆகாரத்தில் ஏ உயிர்ச்சத்து குறைவாக இருந்தால் தொண்ணூற்றுக் கதிகமான வியாதிகள் உண்டாகக்கூடும் என்று ஆராய்ச்சிகளால் தெரிகிறது. அவற்றில் முதலாவது

"தேக சத்திக் குறைவு," இந்தத் தேகசத்திக் குறைவு ஆகாரத்திலே பிசிதம் குறைவாக இருப்பதினால் ஏற்படுவதல்ல, போதுமானபடி மாமிசம் சாப்பிடாததினால் ஏற்படுவதல்ல, ஒரு உயிர்ச்சத்து குறைவாக இருப்பதினால் ஏற்படுவது. வியாதி வருவதற்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது, அடிப்படையானது இதுதான். இனி, மரக்கறி யுணவில் இந்த உயிர்ச்சத்து குறைவாக இருக்கிறதா என்று பார்ப்போம். இது பச்சை அல்லது மஞ்சள் நிறமான காய்கறிகளிலே செழுமையாக இருக்கிறதென ஆராய்ச்சிகளால் தெரிகிறது. மிருகங்கள் இந்த உயிர்ச்சத்தை உண்டுபண்ண வேண்டுமென்றால், பயிர் பச்சைகளைச் சாப்பிட்டாக வேண்டும்; பயிர் பச்சைகளில் காரோட்டின் என்ற ஒரு மஞ்சள் நிறம் இருக்கிறது. மிருகங்களுடைய தீனியிலே அது இருந்தால் தான் அவை ஏ உயிர்ச்சத்தை உண்டுபண்ண முடியும்; மற்றப்படி முடியாது. பால், பாற்பண்டங்கள், முட்டைகளிலுள்ள உயிர்ச்சத்துக் கூடப் பசுவும் கோழியும் சாப்பிட்ட பச்சிலைகளிலிருந்து கிடைத்தனவே.

ஏ உயிர்ச் சத்தினால் உடம்புக்கு என்ன பிரயோசனம்? தேகத்திலுள்ள குழிவணைச் சவ்வு உறுப்புகளுக்கு (Epithelial Structures) அது அவசியம். தாயின் ஆகாரத்தில் அது இருந்தால் தான் அவள் கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கும் அந்த உறுப்புக்களெல்லாம் சரியாகப் பிடிக்கும். ஆகையால், தேகத்திலுள்ள குழிவணைச் சவ்வு உறுப்புக்களுக்கு அது அத்தியாவசியம். அது காய்கறிகளைச் சாப்பிடுவதினாலேயே கிடைக்கும். அந்த உறுப்புக்களுடைய வளர்ச்சி, அமைப்பு, செயல், திறன் சகலமும் அவற்றிற்கு இந்த உயிர்ச்சத்து கிடைக்கிற அளவையே பொறுத்திருக்கிறது.

குழிவணைச் சவ்வுகளால் ஆன உறுப்புக்கள் எவை? அவையாவன: முடி, நகம், வெயர்வைப் பைகள், எண்ணெய்ப் பைகள்; மூக்கு, வாய், தொண்டை, சுவாசக்குழாய், நுரையீரலின் காற்றுப் பைகள் இவைகளிலுள்ள சளிச் சவ்வுகள். மேலும் பற்சிப்பி, எச்சிற் பைகள், வயிறும் அதன் சுரப்பிகளும், குடலும் அதன் சுரப்பிகளும், கல்லீரல், கணையம், சிறு நீர் பிரித்தியிலுள்ள சிறு குழாய்கள், கூபகம், மூத்திரக்குழாய், பித்தப்பை, உவரிப்பை, தேகத்திலுள்ள தூம்பற்ற சுரப்பிகள், நரம்புக்கூறு, மூளை, தண்டுவடம், இவைகளுடைய வளர்ச்சியும் செயலும் சரியாக நடைபெறுவதற்கு ஏ உயிர்ச்சத்து அவசியம். ஆகையாலேதான் அது குறைவாக இருந்தால் தொண்ணூற்றுக்கதிகமான வியாதிகளும் பல சில்லறைக் கோளாறுகளும் உண்டாகின்றன. தோலும் சளிச்சவ்வுகளும் தான் தேகத்தின் "வாசற் காவலாளிகள்" அவை தேகத்திற்குள் நோய்க் கிருமிகள் நுழையாதபடி தடுக்கவேண்டும். ஆனால், அவை சரியாக வேலைசெய்வதற்கு, அவற்றிற்கு ஏ உயிர்ச்சத்து போதுமானபடி கிடைத்துக்கொண்டே யிருக்கவேண்டும். அப்படிக் கிடைக்காவிட்டால் அவை தங்களுடைய வேலையை எங்ஙனம் செய்யமுடியும்? இதனால் பற்பல வகையான கிருமிகளும் தேகத்தினுள் பிரவேசித்து வியாதிகளை உண்டுபண்ணுகின்றன.

மிருகங்கள் பயிர் பச்சைகளைத் தின்பதால்தான் அவற்றிற்கு உயிர்ச்சத்து கிடைக்கிறது. அவை இப்படிக்கிடைக்கிற உயிர்ச்சத்தைப் பாலிலும் கல்லீரலிலும் சேகரித்து வைக்கின்றன. கோழிகள் பச்சிலைகளைக் கொத்தித்தின்னுவதைப் பார்த்திருப்பீர்கள். கிடைக்கிற ஏ உயிர்ச்சத்தை அவை முட்டைகளில் சேகரித்து வைக்கின்றன. மீன்களில் இருக்கிற ஏ உயிர்ச்சத்துக்கூட இப்படிக்கிடைத்ததுதான். அதுமாதிரி வேறெந்த உயிர்ச்சத்துக்காவது இத்தனை அதிகமான இழையங்கள் பேரிலும் உறுப்புக்கள் பேரிலும் செயல்கள் பேரிலும் அதிகாரம் கிடையாது. அது ஒன்றுக்குத்தான் இவ்வளவு அதிகாரம். அது மிருகங்களுக்குக் கிடைப்பதைப் போலவே

மனிதனுக்கும் காய்கறிகளிலிருந்தே கிடைக்கிறது. மற்ற உயிர்ச்சத்துக்களுடைய சங்கதியும் இப்படித்தான். அவை முழுத்தானியங்கள், பழங்கள், காய்கறிகள், பாற்பண்டங்கள், முட்டைகள் இவற்றைச் சாப்பிடுவதினாலேயே கிடைக்கும். நாகரிக மனிதனுக்கோ இறைச்சி மேலே மோகம் பிறந்திருக்கிறது. அதிலும் ஏதோ கொஞ்சம் உயிர்ச்சத்து இருக்கலாம். ஆனால், அது முதலில் காய்கறிகளிலிருந்து வந்ததே தவிர வேறல்ல.

நாம் நல்ல சுகமாகவும் பலமாகவும் திடமாகவும் இருப்பதற்கு நம்முடைய ஆகாரத்தில் முக்கால்வாசியாவது பழங்கள், காய்கறிகள், பால் முதலியனவாக இருக்கவேண்டும். இவற்றுடன் கொஞ்சம் கொஞ்சம் முழுத்தானியங்களையும் கொட்டைகளையும் முட்டைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். தேகத்திற்கு வேண்டிய சகலவகைச் சத்துக்களும் இவற்றில் அடங்கியிருக்கின்றன. புலால் உணவைக் காட்டிலும் அதிகமான சத்துக்கள் காய்கறியுணவில் கிடைக்கின்றன. புலால் உணவின் மூலம் எல்லாவகையான சத்துக்களும், கிடைக்கவேண்டுமானால், நாம் மிருகங்களுடைய உள்ளுறுப்புக்களைச் சாப்பிடவேண்டும். ஆனால், அவற்றைத்தான் நாம் சாப்பிடுவதில்லை. உயிர்ச்சத்துக்கள் மிருகங்களினுடைய மூளை, கண்கள், கல்லீரல், கணையங்கள், சிறுநீர் பிரித்திகள், அட்ரெனல் சுரப்பிகள் ஆகிய உறுப்புகளிலே இருக்கும். சி உயிர்ச்சத்து அட்ரெனல் சுரப்பிகளிலும், ஏ உயிர்ச்சத்து கல்லீரல் கண்களிலும், பி-சத்து இருதயத்திலும், டி உயிர்ச்சத்து கல்லீரலிலும், ஜி உயிர்ச்சத்து கல்லீரலிலும் சிறுநீர் பிரித்தியிலும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும். இந்த உயிர்ச்சத்துக்கள் அத்தனையும் காய்கறி, கனிகள், முழுக்கூலங்கள், முட்டைகள், பால், பாற்பண்டங்கள் முதலியவற்றைச் சாப்பிடுவதால், ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்கும்; அதற்கு மாமிசம் சாப்பிடவேண்டுமென்கிற அவசியமில்லை. முட்டையிலே டி உயிர்ச்சத்து அதிகம் இருக்கிறது. கணைநோய் (Rickets) வராமல் தடுப்பதற்கும் வந்தால் சுகப்படுத்துவதற்கும் இந்த உயர்ச்சத்து அத்தியாவசியம். வெண்ணெய்யிலும் அது இருக்கிறது. ஆனால், முட்டையைப்போல அவ்வளவு அதிகமல்ல. இந்த டி உயிர்ச்சத்தைத்தேகம் சூரியவெளிச்சம் தன்மேல் படுவதால், தானாக உண்டாக்கிக் கொள்ளமுடியும். ஆனால், மழைக் காலத்தில் தேகம் அதை வழக்கம்போல உண்டாக்கிக் கொள்ளமுடியாது. ஆகையால் அக்காலத்தில் பழம், பால், முட்டை இவற்றை அதிகம் சாப்பிடவேண்டும்; பிள்ளைத்தாய்ச்சிகளும் கைக்குழந்தைகளும் வளரும் பிள்ளைகளும் மீனெண்ணெய் குடிப்பது அவசியம்.

காய்கறிகளில் உயிர்ச்சத்துக்கள் அதிகமாக இருப்பதைப் பற்றியே நாம் இவ்வளவு நேரமும் சொன்னோம். ஆனால் அவற்றில் உயிர்ச்சத்துக்கள் மாத்திரமா இருக்கின்றன.? இல்லை. சுதையம், (calcium) சாம்பரம், (potassium) எரியம், (phosphorus) இரும்பு முதலிய கனியங்களும் ஏராளமாக இருக்கின்றன. தேக திடத்திற்கு உயிர்ச்சத்துக்களும் கனியங்களும் போதுமானபடி கிடைப்பதே முக்கியம். இதற்கு இறைச்சி அவசியமில்லை. அதைச் சாப்பிடுவதாக இருந்தால், நிரம்பக் கொஞ்சமே சாப்பிடவேண்டும். நம்முடைய பழக்க வழக்கங்களுக்கும் விருப்பு வெறுப்புக்கும் நாவுக்கும் இனிமேலும் நாம் அடிமைகளாக இருக்கவேண்டாம்.

நல்வழி.

ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்

1. சொல்லும் பிணியெல்லாந் தோல்வியாம் ஐயம் அறும்
பல்லுயிர்க்குந் தாதுமிகும் பத்தியமாம்—வில்லார்
பெருங்கைக்கா மன்றுதிக்கும் பெண்ணே! நறிய
முருங்கைக்காய் தன்னை மொழி.

அகத்தியர் குணவாகடம்.

சொல்லும் பிணி எல்லாம் தோல்வியாம் (நீங்கும்) ஐயம் அறும் (கபம் நீங்கும்). பல் உயிர்க்கும் தாது மிகும். பத்தியமாம் (பத்தியக்கறியாம்) வில்லார் பெருங்கைக்காமன் துதிக்கும் பெண்ணே! நறிய (நல்ல) முருங்கக்காய் தன்னை மொழி.

2. முருங்கைக்காயில் ஈரம் 86·88 சதமும், பிசிதம் 2·53 சதமும் கொழுப்பு ·11 சதமும் கனியப்பொருள்கள் 1·96 சதமும் நார்ச்சத்து 4·8 சதமும் கரிநீரகைப்பொருள் 3·72 சதமுமிருக்கின்றன. கனியப் பொருள்களில் சுதையம் ·032 சதமும், எரியம் ·111 சதமும், இரும்பு ஒரு கிழாயிரச் சிரெடையில் 5·28 சதமுமிருக்கின்றன. 100 சிரெடையில் 26 கனலியும் 184 அலகு ஏ உயிர்ச் சத்தும் 119·6 கிழாயிரச் சிரெடை சி உயிர்ச்சத்து மிருக்கின்றன.

3. சுக வாழ்வு: ஒழுக்கம் கெடாமல் வாழ்ந்து, நல்ல காற்றும், சுத்தமான நீரும் போதிய உணவும் உட்கொண்டு சோம்பலின்றித் தேகத்தின் நரம்புகளுக்கு வேலை கொடுத்து வந்தால், நோயின்மை அதிகமாக காக்கப்படும். நீர் அருந்துவதிலும், ஆகாரம் சாப்பிடுவதிலும், கால் கை முதலியவற்றைக் கழுவுவதிலும் நம்முடைய பழைய பழக்கங்கள் சமூக பாதுகாப்புக்கு மிகவும் பொருந்தியவை.

இராசகோபாலச்சாரியார்.

4. திருப்பணித்தோண்டர் படை: ஊர் முழுவதும் அழுக்கும் அசுத்தமுமின்றி நன்றாக இருந்தால் அனைவருக்கும் இலாபம். அழகும் மகிழ்ச்சியும் நிறைந்த ஊரில் வாழ்வதே நோயின்மைக்கும் சுகத்திற்கும் ஒரு பெரிய சாதனம். ஆகையால், வீட்டைப் போலவே ஊரைப்பற்றியும் கவனம் செலுத்தவேண்டும். கொஞ்சம் தேகவுழைப்புங்கூட எடுத்து ஊருக்கு உதவவேண்டும். இதற்கு அனைவரும் முன் வரமாட்டார்கள். பள்ளங்களை மூடி, வாய்க்கால்களை வெட்டி, புது மண்போட்டு, மழைத்தண்ணீரும் சாக்கடைச்சலமும் நின்று துர்நாற்ற முண்டாக்காமல் ஊரைச் சுத்தமாக வைப்பது ஒரு நல்ல திருப்பணியாகும். இதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஊர்த் திருப்பணித் தொண்டர் படை முன் வர வேண்டும். சில வீரர்கள் பக்கத்துக் கிராமங்களின் மேலும் திருப்பணிப்படை எடுத்துச் சென்று புகழ் பெறலாம். இந்தப்படைக்கு ஆயுதங்கள் இரண்டொரு கடப்பாரை, மண்வெட்டி, துடைப்பம், முறம், கூடை. ஆகா! எழுதப்படிக்கக்கற்ற பெரிய வீட்டுக் குழந்தைகள் இம்மாதிரியாகப் படை எடுத்துச்சென்றால், நம்மைப்பிடிப்பார் யார், அதன் பிறகு?

இராசகோபாலச்சாரியார்

5. குழந்தைகளுக்கு வரும் கக்குவான் இருமலுக்கு கறுத்த எள்ளும், பனைவெல்லமும் சமனிடையாய் எடுத்து இடித்து இலேகியமாய்ச் செய்துகொண்டு, வயது முதலியவற்றிற்கேற்றவாறு, சுண்டைக்காய் அளவு முதல் நெல்லிக்காய்ப் பரிமாணம் வரையில், தினம் மூன்று வேளை வீதம் 6 தினம் கொடுத்து வரக் கக்குவான் இருமல் கட்டாயம் குணப்படும். சூதகச்சிக்கலுள்ள பெண்கள் பெரும்பாலும் எள்ளை உபயோகித்து வருவதுடன் இலேகியத்தையும் சாப்பிட்டால், சூதகவாயு என்ற கொடிய நோயினின்றும் விடுபடலாம்.

செட்டிநாடு.

6. எள்ளைக் கல்லுப்போக அரித்தெடுத்து, பாணலியில் போட்டு நன்ருக, சிவப்பாக வறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். கொஞ்சம் மிளகாய் வத்தலையும் வறுத்தெடுத்துக் கொண்டு எள்ளையும், உப்பையும் போட்டு நன்ருக இடித்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். சோற்றை அழியாமல் நன்ருக வடித்தெடுத்து, அந்தப் பொடியைப் போட்டுப் போதுமான நல்ல எண்ணெய்யை விட்டு நன்ருகக் கலக்கப்பட்டதே எள்ளோதனம்.

செட்டிநாடு.

---

8. கிராமவாசிகள்: விபசாயிகள்.

பயிரிடுபவரின் வறுமை

CHOWDHRY MUKHTAR SINGH

(சாரம் III)

நிலங்கள் சிறு சிறு துண்டுகளாக இருப்பதுதான் வறுமைக்குக் காரணமா?

சில வருடங்களாக இது ஒரு முக்கியக் காரணமாகச் சொல்லப்படுகிறது. நிலங்கள் பலவேறிடங்களில் சிதறி இருப்பதைக் காட்டிலும் சேர்ந்தரணையாக ஒரே இடத்திலிருப்பது நல்லதுதான். அது பயிரிடுவதற்கும் சௌகரியமாக இருக்கும்; வேலைச் சிரமமும் செலவும் கொஞ்சம் குறையும்; அதிகமாக உழைப்பதற்கும் அதிக மேனி காணும்படி செய்வதற்கும் சௌகரியமாகவுமிருக்கும்; அதிகப்படியாக வரப்புகளாகக் கழிகிற இடங்களிலும் நிலத்தோடு சேர்த்துச் சாகுபடி செய்யலாம்; என்ருலும், இதனை வறுமைக்கு ஒரு முக்கிய காரணமாகச் சொல்லி விடுவதற்கில்லை. அதிகப்படியான வரப்புகளிலும் ஒரு சதமான நிலமே கழிவதாக இருக்கும். மற்றும் சௌகரியக் குறைவுகளாலும், ஒரு சதமானமே வரவில் குறையக்கூடும்.

சேர்ந்தரணையாக இருக்கும் அதிகப் பரப்பான நிலம் மேடு பள்ளமாக இருக்குமென்ருல் அதனை ஊடு வரப்புகள் போட்டும் பல தட்டுகளாகப் பிரிக்க வேண்டியதிருக்கும். தண்ணீர் அதிகமாகக் கட்டவேண்டிய பயிர்கள் சாகுபடி செய்வதாயிருந்தாலும், ஊடு வரப்புகள் பெரிய வரப்புகளாகப் போட்டாக வேண்டும். ஆகையால், சில்லறைக் குண்டு நிலங்களால் வரப்புக் கழிவுச் சேதம் அதிகமாக இருக்கக் கூடியதில்லை.

சேர்ந்தரணையாக இருப்பதால், நேரம் மிச்சமாகக்கூடும். ஆனல், அப்படி மிச்சமாகிற நேரத்தைப் பயன்படுத்துவதில்லையென்ருல், நேரம் மிச்சமாய்த்தானென்ன பயன்? வருடத்தில் நான்கு மாதம் தொடர்ந்து வேலைகளே யில்லாதிருக்கும் பொழுதுகூட வேறு வேலை பார்ப்பதற்கில்லையென்ருல், அப்படி வேலை பாராதிருப்பது குற்றமேயன்றி, சிறு சிறு குண்டுகளாக இருப்பதினலே வரவு குறைந்து விட்டதாகச் சொல்லிவிடமுடியாது. இப்படியாக வரப்புக்கழிவுச் சேதம் இல்லாது போவதாலும், ஒன்று சேர்ப்பதால் மிச்சமாகும் நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுவதாலும், வரவு இரண்டு சதமானம் அதிகமாவதாகவே வைத்துக்கொள்ளுவோம். இந்த இரண்டு சதமான அதிக வரவால் பயிரிடுபவரின் வறுமை ஒழிந்து போகுமா? இப்படிச் சொல்லுவதால், இந்த விருத்திகள் வேண்டாமென்று நாம் சொல்லுவதாகக் கொள்ளக் கூடாது; இவை வேண்டும் தான்; ஆனல் இவை போதா.

நிலம் ஒரு குடும்ப வாழ்க்கைக்குப் போதுமானதாக இருக்கவேண்டும் என்று எளிதாகச் சொல்லிவிடலாம்; இதுவரை சிதறியிருப்பதை ஒன்ருகச் சேர்த்து விடுகிருேமென்

றும் வைத்துக்கொள்ளுவோம். இனிப் பின் வாரிசுகள் பிரிக்காதபடி மொத்தமாகவே அனுபவித்து வருவார்களா? அதற்கான சட்டம் வேண்டாமா? அப்படிச் சட்டமிருந்தாலும் போதுமா? என்பவற்றையும் நாம் கவனிக்க வேண்டும்.

பர்மாவில் மூத்தமகனே நிலங்களை யடைகிறதென்றும் மற்ற மக்கள் அவர்கள் பங்குக்குரிய தொகையை மூத்த மகனிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறதென்றும் சட்டமாக இருந்துவருகிறது. அதனால், அநேகமாக, மூத்தமகன் நிலங்களையடையும் போதே கடனாளியாகிறானென்றும் மற்ற மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்களென்றும் தெரிகிறோம். பர்மாவில் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக இருக்கும் நிலங்களின் பரப்பும் அதிகம். இன்னும் திருத்திப் புதிதாகச் சாகுபடி செய்துகொள்ளக்கூடிய நிலங்களும் அதிகம். அங்கேயே இந்தச்சங்கடம் வளர்ந்து வருகிறதென்றால், நம் நாட்டில் இதனை நிவிர்த்திப்பதெப்படி?

சமீன்தார்களுக்கு (நிலங்களைப் பிறரைக்கொண்டு சாகுபடிசெய்கிறவர்களுக்கும். ப-ர்.) நிலங்கள் விருத்தியாகிவரவேண்டும் என்பதில் அக்கறை கிடையாது. நிலங்கள் விருத்தியாகிவராத பொழுது, அதிக விளைவையும் காணமுடியாது; பழைய விளைவுமே இல்லாது குறைந்துவரும்.

மக்களுக்குள் பாகம் பிரிக்கும்போது, சேர்ந்தரணையாகவே ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டு மென்று சொல்லிவிடுவதும் சாத்தியமான காரியமல்ல. நிலங்கள் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. ஒரேமாதிரியான நிலங்களும் தண்ணீர் வசதியாலும் அதன் குறைவாலும், அதிகமாக, குறைவாகப் பெறக்கூடியதாகலாம். இந்த ஏற்றத்தாழ்வை அதிகச்செலவில்லாமலும் சிரமமில்லாமலும் சமரசப்படுத்துவதற்கான திட்டமும் வேண்டும்.

பஞ்சாபில் நிலங்களும் தண்ணீர் வசதியும் அனேகமாக ஒரே மாதிரியாக இருக்கின்றன. சாதாரண நிலப்பரப்பும் அதிகமாக இருக்கிறது. தரிசு நிலங்களும் அதிகமாக இருக்கின்றன. நிலங்களும் அநேகமாகச் சாகுபடி செய்கிறவர்களுக்கே சொந்தமாக இருக்கின்றன. ஆகையால், பயிரிடுபவர்களே நிலங்களை ஒன்றுசேர்ப்பதற்கு ஆத்திரப்படுகிறார்கள். வேறுவிதமான சிக்கல்களுமில்லை. அப்படியிருந்தும், நிலங்களை ஒன்றுசேர்க்க, ஏக்கருக்கு ரூ. 1—6—0 முதல் ரூ. 2—11—0 வரை செலவாகிறது. இந்தச் செலவைப் பயிரிடுபவர் பொறுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அரசாங்கமே பொறுத்துக்கொள்ளுமென்றாலும், நம் நாட்டிலுள்ள சிதறு நிலங்களை ஒன்றுசேர்க்க, இந்தக்கணக்கின்படிக்கும் மூப்பத்திமூன்றுகோடி ரூபா வேண்டும். (ஒரு குடும்பச்செலவிற்குப்போதிய நிலங்களாக இருந்துவரவேண்டியதவசியமாதலால், செலவைப் பாராது அப்படி ஒன்றுசேர்க்கவும் வேண்டும்; பின்னும் அவை பிரிந்துவிடாதபடி சட்டமும் செய்துகொள்ளவேண்டும். ப-ர்.)

(தொடரும்.)

9. கதை: சரித்திரம்

கூறுகெட்ட குப்பான்

V

நல்லதம்பி மட்டும் முன்போலத் தன் தாயார் தகப்பனாரோடும் தங்கையோடும் வீட்டோடிருந்து குடும்பக் காரியங்களைக்கவனித்து வந்தான். வீட்டில் வளர்ந்துவந்த நாய் வியாதிப்பட்டு சாகக் கிடந்தது. அதற்கு அருமையாக அவன் சோறு போடும்போது, அவன்

தலைப்பாகையிலிருந்து வந்த வேர்களில் ஒன்று கீழே விழுந்தது. அதனையும் அந்த நாய் தின்றது. உடனே அதன் வியாதியும் குணமாகி விட்டது. அதனைக் கண்ட அவனுடைய பெற்றோர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

அது சமையம் அவ்வூர் அரசன் மகளுக்குக் கண்டிருந்த குட்டநோய் எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் குணமாகாதிருந்ததால், அவள் வியாதியைக் குணப்படுத்துகிறவன் கலியாணமாகாதவனாக இருந்தால், அவனுக்கே தன் மகளை விவாகம் செய்து தருவதாகவும் விளம்பரம் செய்தான். அதனைக்கேட்ட நல்ல தம்பியின் பெற்றோர்கள் அவனைப்போய் அவனைக் குணப்படுத்தி வரும்படி தூண்டினார்கள். அவனும் அதற்கொருவாறு இசைந்தான்.

வேரையும் எடுத்துக்கொண்டு அவன் தெருவுக்கு வந்தபோது கைமுடமான பெண்ணொருத்தி பிச்சையெடுப்பதற்கும் சௌகரியமில்லாதவளாய் எதிரே வரக்கண்டான். அவளுக்கு அந்த வேரைத்தின்கச்சொல்லிக் கொடுத்தான். அவளுக்கு இரண்டு கைகளும் நல்ல கைகளாகி விட்டன. அவனோடு அரண்மனைக்குத் துணைக்குப்போகவேண்டுமென்று அவன் பின்வந்த அவனுடைய பெற்றோர்கள் அவன் செய்ததைப்பார்த்துவிட்டு, அவனை அவர்கள் வயிற்றெரிச்சல் தீரத் திட்டினார்கள். எப்படியும் நாசமாகப் போ வென்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் போய் விட்டார்கள். நல்லதம்பி பழைய குறளியை நினைத்தான். அது ஒரு வேரைக் கொண்டுவந்து கொடுத்தது. அதனோடு அரண்மனைக்குப் புறப்பட்டான்.

அவன் வண்டியில் மாட்டைமாட்டித் தன் இருப்பிற்கும் வைக்கோல் எடுத்துப் போட்டுப் புறப்படும் சமையம், அவன் என்னதான் செய்கிறானென்று அவனைப்பார்க்க வந்த அவனுடைய தாயார், எங்கேயடா போகிறாயென்று கேட்க, அரண்மனைக்குத்தானென்றான். இருந்த வேரையும் பிச்சைக்காரிக்குக் கொடுத்துவிட்டு அங்கேபோய்க் கேவலப்பட்டு வரவாவென்று தடுத்தும் கேட்காமல்—மீறி, அரண்மனைபோய்ச்சேர்ந்தான்.

அங்கேபோய் அரண்மனைக் காவற்காரர்களிடம் தான் வந்த சங்கதியைச் சொன்னான். அரசன் கட்டளையின்படி, அவனை உள்ளே அழைத்துச் சென்றார்கள். அவனும் வேரைக் கொடுத்துத் தின்கச்சொல்லவும் அரசகுமாரியும் பூரணமாகக் குணமானாள். அரசனும் தான் விளம்பரம் செய்திருந்தபடி, தன் மகளை அவனுக்கே விவாகம் செய்து வைத்தான்.

VI

நல்ல தம்பிக்கு அரண்மனையில் பொழுது போகவில்லை. என்னடா செய்கிறதென்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தான். அரசனும் இறந்தான். அவனே அரசனானான். அரண்மனை ஆடைகளையெல்லாம் கழற்றித்தன் மனைவியிடம் கொடுத்தான். இனி இங்கே இருக்க முடியாது. பழைய காட்டிற்கு நான் போக வேண்டும் என்று அவளிடம் சென்றான். அவளைத் தன்னுடன் வரவேண்டாமென்று சொல்லியும் அவள் கேட்காமல் தானும் எளிய உடையை அணிந்துகொண்டு பின் தொடர்ந்தாள். இருவருமாக காட்டில் குடிசைபோட்டுக்கொண்டு காட்டு வேலைகள் செய்துவந்தார்கள். சில காலங்கழித்து அவனுடைய பெற்றோர்களும் தங்கையும் போய் அவனோடு சேர்ந்துகொண்டார்கள். அவர்களும் அவனுடன் வேலைசெய்து வந்தார்கள்.

இப்படிச் சில நாட்கள் கழிய அரசாங்கம் சீர் குலைய ஆரம்பித்தது. அதனைச் சகியாமல், மந்திரிமார்கள் நல்லதம்பி இருக்குமிடம்போய், அவன் மனைவியிடம், என்ன இப்படி செய்துகொண்டிருக்கிறீர்கள்? ஊரெல்லாம் கேவலமாகப் பேசுகிறதே! என்று சொன்னார்கள். என்னிடம் சொல்லி, என்ன செய்ய? நான் அவருடைய நோக்கம்போல் நடக்கவேண்டியவள். அவரிடம் வேண்டுமென்றால், சொல்லிப்பாருங்களென்று சொல்லிவிட்டாள்.

பிறகு, நல்ல தம்பியைப் பார்த்துச்சொன்னார்கள். நான் செய்துவருவதில் என்ன தவறு இருக்கிறதென்று கேட்டான். இப்படிச் சொல்லலாமா, நீங்கள்? நாடாளும் அரசரல்லவா? இப்படிக்காட்டை யாண்டுகொண்டிருந்தால், உலகம் பழிக்காதா? என்றார்கள். அரசனென்றால், எனக்கு வயிறு இல்லையா? என் வயிற்றுக்கு நான் உண்ணப்பாடுபடவேண்டாமா? என்னைச் சேர்ந்தவர்களையெல்லாம் நான் தெருவில் விட்டுவிடுவதா? என் பெற்றோர்களும் என் தங்கையும் என்னையல்லாமல் எப்படிப் பிழைப்பார்கள்? என்னைப்பிடித்த கெட்டகாலம் ஏதோ சில நாட்கள் மானங்கெட்ட உணவு உண்டுகொண்டிருந்தேன். அப்படியே என்றைக்கும் நான் இருந்துவரவா சொல்லுகிறீர்கள்? என்றான். அம்மட்டில், அவனிடம் பேசுவதில் பிரயோசனமில்லை யென்று போய் விட்டார்கள்.

தீர்வை செலுத்துவார் எவருமில்லை. பணவசூல் இல்லாத நிலைமையில், அரசாங்கச் செலவுகளும் செய்வதற்கில்லாமல் நின்றுவிட்டன. அரசாங்கவேலைக்காரர்களுக்குச் சம்பளம் போடுவதற்குமில்லை. திரும்பவும், மந்திரிமார்கள் அவனிடம்போய்ச் சம்பளம் போடுவதற்குப் பணமில்லையென்றார்கள், சம்பளம் போடவேண்டாமென்று அவன் சொன்னான். சம்பளம்போடாவிட்டால், வேலை நடக்குமா? என்று கேட்டார்கள். அடுத்தவர்கள் தேடித் தருகிறதைச் செலவழித்துக்கொண்டிருப்பதும் ஒரு வேலையா? இந்த வேலை செய்யாவிட்டால், குடியா கெட்டுப்போகுமென்றான். ஒன்றும் சொல்லுவதற்கில்லாமல் திகைத்து நின்றார்கள். எல்லாரையும் காடுகரைகளுக்குப்போய் வேலைபார்க்கச்சொல்லுங்கள்; நல்ல உரம் அடிக்கச்சொல்லுங்கள்; நன்றாக உழுது விதைத்துப் பாடுபடச் சொல்லுங்கள். வீடுவாசலைத் தெருவைச் சுத்தமாக வைத்துவரச்சொல்லுங்கள். அவரவர்கள் பாட்டை அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் பார்த்தால் போதுமென்றான். அங்கே நிற்பதும் பிரயோசனமில்லையென்று மந்திரிமார்கள் திரும்பிவிட்டார்கள்.

நல்லதம்பியின் மனைவியும் வாழ்வரசியிடம் காட்டுவேலைகளைக் கற்றுவந்தாள்; அவளுடன் தானும் வேலைபார்த்துவந்தாள். அந்நாட்டிலுள்ள சுகவாசிகளெல்லாம் அடுத்த நாடுபோய்ச் சேர்ந்துபோனார்கள். அந்த நாட்டில் வரிவம்புமில்லை. அவரவர்கள் பாட்டுக்கு அவரவர்கள் காட்டில் உழைத்து இல்லாதவர்களுக்கும் கொடுத்து வாழ்ந்து வந்தார்கள்.

(எவரும், அரசாங்க ஆதரவின்றி, தன் தேவைக்கு அதிகமான பணமோ நிலமோ சேர்த்துவைக்க முடியாது; கோழையாக இருந்து வரவு முடியாது, இல்லாதவர்களுக்கு உபகாரமாக வாழாதிருக்கவும் முடியாது. உழைப்பும் உண்மையும் பிறருக்குபகாரமும் நிறைந்த நாட்டில் அரசாங்கக் கட்டுப்பாடின்றியும் சுகமாக வாழக்கூடும்; என்றாலும், வறுமையும் அறியாமையும் மலிந்த நாட்டில் அவை காணவும் முடியா; பெருங்குழப்பங்களும் வந்து சேரும்; ஆகையால் அத்தகைய நாடுகளுக்கு—ஏன் மற்ற நாடுகளுக்குமே, ஏழைகள் தொழிலாளிகளுக்கு இரங்கும் அரசாங்கம் அவசியம் வேண்டும்; அது நன்மைபயக்கவும் தவறாது; அதனால், பல சௌகரியங்களும் எல்லாருக்கும் அமையும் ப-ர்.)

(தொடரும்.)

10. குடிசைத் தொழில்: கைத்தொழில்

பொருளாதார விருத்திக்கான சௌகரியங்களைப் பற்றிய குறிப்பு

Madras Industries and Commerce Bulletin No. 44 L. B. Green, Director of Industries and Commerce. Madras.

(சாரம் I)

நம் மாகாணத்திலிருந்து விளைபொருள்களே வெளிநாடுகள் போகக்கூடியனவாகவும் நமக்கு வேண்டிய செய்பொருள்களும் வெளிநாடுகளிலிருந்தே வரவேண்டியன வாகவும் இருக்கின்றன. சில வருடங்களாக பிற கைத்தொழில் நாடுகளும் விபசாய விளைவை அதிகப் படுத்தி வருகின்றன. அதற்குத் தக்கதாக, நம் மாகாணத்திலும் கைத்தொழில்களை விருத்தி செய்யாதிருந்தால், நம் தேவை பிற நாடுகளிலிருந்தே வரவேண்டியதாக ஏற்படும். விபசாய விளைபொருள்களின் விலை குறைவாக இருந்து செய்பொருள்களின் விலை குறையாத பொழுது நமக்கு வரும் பணம் குறைந்தும் நாம் கொடுக்கும் பணம் அதிகமாகவும் ஆகும்; அதனால், பணமுடையும் அதிகமே யாகும்.

இப்பொழுது சில காலமாக, வெளிநாட்டு வியாபாரத்திற்கு பலவிதமான இடைஞ்சல்களுமிருப்பதால், நாம் நம்முடைய விபசாயத்தையும், கைத்தொழில்களையும் அதற்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். தவறினால், நாம் இன்னும் அதிகமாகச் சங்கடப்பட வேண்டியதும் வரும். நமக்குத் தேவையாயிருப்பதும் நம் நாட்டிலேயே செய்து கொள்ளக் கூடியதுமான செய்பொருள்களை, நம் நாட்டிலேயே செய்துகொள்ளுவதற்கான ஏற்பாடுகளை, நாம் செய்தாக வேண்டும். வெளிநாட்டுப் பொருள்கள் வந்தே செய்யக்கூடிய கைத்தொழில்களை இங்கே செய்வதும் விருத்தி பண்ணுவதும் சிரமப்படும்.

சென்னையிலும் வங்காளத்திலும் காரத் (Alkali) தொழில் செய்யலாம்; அப்படியானால், சவர்க்காரம் (Soap) செய்வதற்கு வேண்டிய உவரக்காரம் இங்கேயே கிடைக்கும்; இங்கேயே, சவர்க்காரம் செய்வதும் எளிதாகும்.

அடியாந்திறமான (Basic) பெரிய தொழில்களும் மத்திய தரத் தொழில்களும் சிறு தொழில்களும் குடிசைத் தொழில்களும் நம் நாட்டில் விருத்தியாக வேண்டும்; அவற்றால் எல்லாருடைய வரவும் அதிகப்படவும் கூடும். விபசாயத்தை மட்டும் விருத்தியாகவும் அதிகப் பலன் தரும்படியாகவும் செய்வது போதாது.

புதிய கைத்தொழில்கள் ஆரம்பிப்பதில், அதற்கு வேண்டிய பொருள்கள், நம்முடைய நாட்டிலேயே விளைகிறதாக இருக்கவேண்டும். செய்பொருள்களும், நம் நாட்டிலேயே அழியக்கூடியதாயு மிருக்கவேண்டும். அப்படித் தொழில்களையே முதலாவதாக ஆரம்பிக்க வேண்டும். அதன் பிறகே, நம் நாட்டின் விளைபொருள்கள் உதவக்கூடிய அல்லது நம் நாட்டிலேயே செலவாகக்கூடிய செய்பொருள்கள் சம்பந்தமான மற்றத் தொழில்களை ஆரம்பிப்பது உசிதமாகும். நிலத்தையே சார்ந்திருக்கிறவர்கள் சிலருக்கேனும் இப்படி வேறு புகல் காட்டாவிட்டால், விபசாய விளைவு எவ்வளவு அதிகமான போதிலும், மிச்சம் அதிகமாகாது.

நம் மாகாணத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஆறுகோடி ரூபா பெறுமான தோல்கள் போகின்றன; அவை நம் மாகாணத்திலும் ஏராளமாக செலவாகக் கூடும். நம் மாகாணத்திற்குக் கடல் வழியாக மட்டும் இரண்டு இலட்ச

ரூபா பெறுமான தோற்சாமான்கள் வந்து இறங்குகின்றன. புகைவண்டி மார்க்கமாகவும் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. சீமைக்குப் போகும் குரோம் தோல்கள் மட்டும் நன்ருகப் பதனிடப்பட்டு அனுப்பப்படுகின்றன. இந்த நிலைமையிலும், நம் மாகாணத்தில் நானூறு ஐந்நூறு பதனிடும் சாலைகளுமிருக்கின்றன; 20,000 பெயர்களும் வேலை பார்க்கின்றனர். ஆனால், பதனிடும் சாலைகளெல்லாம் சில ஜில்லாக்களிலேயே இருக்கின்றன; மற்ற ஜில்லாக்களிலும் பதனிடும் சாலைகளை யமைக்கலாம். வெளிநாடுகளுக் கனுப்பும் தோல்களையெல்லாம் நவீன முறைப்படி பதனிட்டே அனுப்பவும் செய்யலாம். இப்படியெல்லாம் செய்வதினால், இன்னும் நூற்றுக்கணக்கான பதனிடும் சாலைகளுக்கும் ஆயிரக்கணக்கான பெயர்களுக்கும் வேலையும் கிடைக்கும்; தொழிலாளிகளுக்கு நல்ல கூலியும் முதலாளிமாருக்கு நல்ல இலாபமும் கிடைக்கக்கூடும். (சமீபமாக முடிந்த ஒப்பந்தத்திலும், பர்மாவிலிருந்து வரக்கூடிய சாயப் பொருள்களுக்கு வரி விதிப்பதில்லையென்று நம் அரசாங்கமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. ப-ா.)

சேலம் இரும்புச் சுரங்கங்களில் வேலை செய்வதென்ருல், அதற்கு முன்னதாக திரிசிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள எரிய உப்புக்களின் இருப்பையும் சோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். கோயம்புத்தூரிலும், கிருட்டிணுவிலும் ஏராளமாகக் கிடைக்கும் சுண்ணும்புக் கற்கள் செமண்டுத் தொழிலுக்கும் காரத் தொழிலுக்கும் உதவக்கூடும்.

(தொடரும்.)

---

11. செய்தித் திரட்டு:

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்.

1. பம்பாய் பயிரிடுபவர் பாதுகாப்புச் சட்டம்.

இந்தச்சட்டம் சூரத், தாணு, மேற்கண்டேசு, தார்வார் ஜில்லாக்களிலும் இன்னும் சில பாகங்களிலும் அமுலுக்கு வந்திருக்கிறது. இந்தச்சட்டம் அமுலிலிருக்கும் இடங்களில் 1938ம் வருடத்திய சிறுநில சுவான்தார் சட்டத்தின் 9-வது விதி அமுலிலிராது.

இந்தச்சட்டம் அமுலுக்கு வந்தபின், பத்துவருடத்திற்குக் குறைந்து, கட்டுக்குத்தகைக்கு வாரச்சாகுபடிக்கு விடக்கூடியதில்லை. ஒப்புக்கொண்டிருப்பதும் சட்டப்படி செல்லக்கூடியதுமான பொறுப்பு மேல்வாரம் தவிர்த்து வேறெதும் நிலசுவான்தார் பெறக்கூடியதுமில்லை. பயிரிடுபவரை வேகாரிவேலை வாங்கக்கூடியதுமில்லை. இந்தச்சட்டத்திற்கு மீறி நடப்பவர்கள் ரூ. 1000 வரை அபராதம் விதிக்கப்படுவார்கள்.

சில பிரதேசங்களில், அரசாங்கம் பொறுப்புத்தொகை இவ்வளவிற்கு மேற் போகக்கூடாதென்று நிர்ணயிக்கும். அதற்குமேல், நிலசுவான்தார்கள் வசூலிப்பது குற்றமாகும்.

அரசாங்கம் தீர்வை வசூலை நிறுத்திவைக்கும்போது, தீர்வையை வசா செய்யும்போது, அவ்வளவிற்கு நிலசுவான்தார்களும் தங்கள் நிலங்களைப் பயிரிடுபவர்க்குச் சலுகை காட்ட வேண்டும். இந்த விதி வாரப் பிரிவினைக்கில்லை.

பயிரிடுபவரே, தாம் சாகுபடி செய்திருப்பவற்றிற்கும் நட்டிருக்கும் மரங்களுக்கும் உரியவராவர். இந்தச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, நில சுவான்தாருடைய அனுமதியின் பேரில் நடப்பட்டிருக்கும் மரங்களுக்கு மட்டும், அவர் நட்ட ஈடுபெறக்கூடும்.

பொறுப்புத்தொகையைச் செலுத்தாதிருந்தாலே, கட்டுக்குத்தகை இரத்தாகிவிடும்.

கோர்ட்டிலிருந்து அவரை வெளியேற்றும் உத்தரவு பிறக்குமுன் பொறுப்புத்தொகையையும் சட்டப்படிக்குள்ள செலவையும் கோர்ட்டில் செலுத்திவிட்டாலும் அல்லது அவற்றிற்குப் போதிய சாமீன் கொடுத்துவிட்டாலும் அவரை விலக்கக்கூடியதில்லை.

பயிரிடுபவர் நிலத்தைக் கெடுக்கிறுரென்றாலும், கட்டுக்குத்தகை இரத்தாக வேண்டியதுதான்; ஆனால், நிலசுவான்தார் இதுபற்றி அறிவித்த ஒரு வருடத்திற்குள், பயிரிடுபவர் நிலத்தைப் பழைய நிலைமைக்குக்கொண்டுவந்துவிட்டால், அவரைக் காலிசெய்யக் கூடியதில்லை.

நில சுவான்தார்கள் தங்கள் வசூலுக்குக் கட்டாயம் இரசீது எழுதிக் கொடுத்துவர வேண்டும்; தவறினால், அபராத தண்டனைக்குள்ளாவார்கள்.

பயிரிடுபவர் ஒருவர் 1938-ம் வருடத்திற்கு முன் ஆறுவருடம் துயர்ந்து தாமே நேராகத்தனித்தேனும் பிறரோடு கூட்டாக வேனும், அல்லது தாமும் தம்முன்னோர்களுமாகவேனும், ஏதாமொரு நிலத்தையேனும் அல்லது அதே நில சுவான்தாருக்கு அதே கிராமத்தில் பாத்தியமான பல வேறு நிலங்களையேனும் சாகுபடி செய்து வந்திருந்தால் அவர் விசேட உரிமைகளுக்கும் உரியவராவார். 1937 ஏப்பிரல் முதற் தெய்திக்கு முன் ஆறு வருடம் அப்படியனுபவித்திருந்து பின் விலக்கப்பட்டிருந்தாலும், முன் நிபந்தனைகளின் படி நடந்துவரத் தயாரென்று நிலசுவான்தாருக்கு அறிவிப்பவரும் விசேட உரிமைக்கு உரியவராவர்.

விசேட உரிமை யடைந்திருப்பவரின் சாகுபடிப் பாத்தியம், இந்தச்சட்டம் அமுலுக்குவந்த நான்கு மாதங்களுக்குள் முந்திய மார்ச்சு மீ 31-உ யோடு முடிகிற வருடப் பொறுப்புத் தொகையைச் செலுத்தாதிருந்தாலும், நிலவரிக் கடைசித்தவணைக்கு 15 நாட்களுக்குப் பின்னும் தாம் செலுத்தவேண்டிய பொறுப்புத்தொகையைச் செலுத்தாதிருந்தாலும், நிலத்திற்கு நிரந்தரமாகப் பாதகம் அளிக்கும் காரியம் செய்தாலும், உட்குத்தகைக்கு விட்டாலும், தாமே நேராக சாகுபடி செய்யத் தவறினாலும் வபசாயக் காரியங்கள் தவிர்த்து மற்றக் காரியங்களுக்கு நிலங்களை உபயோகித்தாலும், நிலசுவான்தார் தம் சொந்த சாகுபடிக்கு அல்லது உபயோகத்திற்கு வேண்டுமென 12 மாத அறிவிப்புக் கொடுத்த பின்னும் அழிந்து போகும். இந்த விசேட உரிமை பெற்றிருப்பவரை நிலத்தை விட்டுக் காலிசெய்தால், அவர் செய்திருக்கும் விருத்திச் செலவையும் தரவேண்டும். சட்டத்திற்கு விரோதமாக அப்படிச் செய்திருந்தால், அதிக நட்டம் செலுத்த வேண்டியதும் வரும்.

இந்த விசேட உரிமையுடையவர் பொறுப்புத்தொகை அதிகமென்று குறைக்கவும் ஏற்பாடு செய்யலாம்; நில சுவான்தார் பொறுப்புத் தொகை குறைவென்றுகூட்டவும் நடவடிக்கை நடத்தலாம்.

Bombay Information.

2. பாதுகாப்பு வரியை நம்மத்திய சர்க்கார்விதித்த பிறகு, ஆச்சரியப்படத்தக்க மாதிரியில்சருக்கரைச் சாலைகள் வளர்ந்து விட்டன என்று மைசூர் திவான் சர். மிர்சா இசுமாயில் மகிழ்கிறுர். ("The growth of the sugar industry in India is a miracle wrought by the policy of protection adopted by the Government of India") மைசூர் ராச்சியத்திலுள்ள சனங்களின் தேவைக்கு 8,000 தன் சருக்கரை போதுமானது; ஆனால், அங்கே 30,000 தன் சருக்கரை ஆலைகளால் உற்பத்தி செய்யப்படுகிறது. மைசூரில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 28 தன் கரும்பு கிடைக்கிறது; ஆனால், ஆந்தர நாட்டிலும், தமிழ் நாட்டிலும் 30 முதல் 60 தன் வரையில் கிடைக்கிறது. நமது நாட்டுக் குடியானவர்கள் சாகுபடி செய்கிற கரும்புக்குத் தன் ஒன்றுக்கு, ரூ 10—8—0 விலை கிடைக்கிறது. ஆகவே ஐக்கியமண்டலம்; பீகார் முதலிய மாகாணங்களின் ஆலைப்போட்டியை ஒருவாறு

சமாளிக்கக்கூடுமானால், இந்து பத்திரிகை சொல்லுவது போல, கரும்பு சாகுபடி செய்கிறவர்களுக்கும் சருக்கரை சேர்க்கிறவர்களுக்கும் போதுமான அனுகூலம் கிடைக்கக்கூடும். மாகாணங்களுக்கும் சுதேச இராச்சியங்களுக்கும் தக்கயோசனை சொல்லுவதற்காக நம் மத்திய சருக்கார் ஒருமத்திய ஆலோசனைசபை ஏற்படுத்தப்போவதாக வியாபார மெம்பர் இந்திய சட்டசபையில் தெரிவித்தார். அவரது முயற்சி வெற்றியடைந்தால், கரும்பு சாகுபடி செய்கிற குடியானவர்களுக்கு நியாயமான வரும்படி கிடைக்கும்; கூட்டுறவு முறையில் ஆலைகளில் சருக்கரை உற்பத்தி செய்கிற கூட்டுறவாளர்களுக்கும் ஊக்கம் அதிகரிக்கும்.

கூட்டுறவு.

3. சென்னை விபசாயப் பீடை பிணிச் சட்டத்தின்படி மா. த. சென்னை கவர்னர் தண்டுப்பூச்சியும் (Stem weevil) செம்புழுவும் (Pink boll worm) கீழே கண்ட பிரதேசங்களில் கம்போடியா பருத்திக்கும் தார்வார் அமெரிக்கன் எனும் பச்சநாடன் பருத்திக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவைகளென்றும் அவற்றையொழிப்பதற்காக 2வது 3வது தபசில்கள் தவிர்த்த மற்றப் பிரதேசங்களில் பருத்திமாறுகளைச் செப்டம்பர்மீ 1வுக்குள் பிடுங்கி உலரப் போட்டுவிடவேண்டுமென்றும் எதிலும் செப்டம்பர் 1வுக்கு முன் புதிதாகப் பருத்தி விதைக்கக் கூடாதென்றும் 2வது தபசில் சம்பந்தப்பட்ட மட்டில் செப்டம்பர்மீ 30வு பிடுங்கியெறியக்கூடிய கடைசித்தெய்தியாக இருக்குமென்றும் 3வது தபசில் சம்பந்தப்பட்ட மட்டில் ஜூன் 15ம்வு கடைசித்தெய்தியாக இருக்குமென்றும் தெரிவிக்கின்றனர்.

கோயம்புத்தூர் சில்லா:— கொள்ளேகால் தாலூகா தவிர சில்லா பூராவும்.

சேலம் சில்லா:— ஓமலூர்,திருச்செங்கோடு, சேலம், நாமக்கல், இராசிபுரம், ஆத்தூர் தாலூகாக்கள்.

திரிசிராப்பள்ளி:— சில்லா பூராவும்.

மதுரை:— கீழே 1வது தபசிலில் குறித்துள்ள திருமங்கலம் தாலூகாவைச்சேர்ந்த கிராமங்கள் தவிர சில்லா பூராவும்.

இந்த அறிவிப்பு 3-வது தபசில் சம்பந்தமாக மேமீ 20-ம்வு முதலும் மற்றப்படி ஆகஸ்டு மாதம் 1வு முதலும் அமுலுக்கு வரும்.

1-வது தபசில்.

ஆயக்குளம், மாத்தூர், கரிகாலம் காத்தான், தம்பிபட்டி உருத்திரப்ப நாயக்கம்பட்டி, சுப்பணுபுரம் மசரா உள்பட அம்மாபட்டி, முத்துக்குமாரபுரம் குட்டிக்குமாரபுரம் என்ற மேலப்பட்டி மசராக்கள் உள்பட துலுக்கப்பட்டி, குமாரபும் சிதம்பராபுரம் அருணாசலபுரம் மசராக்கள் உள்பட வெள்ளூர், சனுப்பப்பட்டி, சாத்தபிள்ளைபட்டி, கொடுக்குளம் கிராமங்களும் சர்வே 756ம் நிம் பாகமும்.

2-வது தபசில்.

கோட்டூர், மலையாண்டிப் பட்டினம், காளியாபுரம், வேட்டைக்காரன் புத்தூர், அங்களக்குறிச்சி, துறையூர் கிராமங்கள் சல்விபட்டி அருத்தநாரி பட்டியின் பாகங்கள்.

இந்தக்கிராமங்களில் செப்டம்பர்மீ 30வுக்குப் பின்னும் வாய்தா வேண்டுமென்றால், விபசாய அதிகாரிகளைக் கலந்துகொண்டு கலக்டர் கொடுப்பார்; ஆனால், செப்டம்பர்மீ 1வு முதல், இந்தக்கிராமங்களிலும் விதைக்கலாம்.

3-வது தபசில்.

கோயம்புத்தூர் சில்லா கோயம்புத்தூர் தாலூகாவிலுள்ள எட்டிமடை, பச்சனூர், திருமலையம் பாளையம், வழுக்குப் பாறை, அரிசிப்பாளையம், ஒத்தக்கல் மண்டபம், போடிப்பாளையம் மசரா உள்பட சரிபாளையம், மதுக்கரை, மருதம்பட்டி, பாலத்துறை வட்டகை, மைலேறிப்பாளையம் வட்டகைக் கிராமங்கள்.

இந்தக் கிராமங்களில் ஆகஸ்டுமீ 1வு முதலும் புதுப் பருத்தி விதைக்கலாம்.

G. O. Mis No. 461. Development.

4. வியாபாரிகள் நெல்லையும் அரிசியையும் கட்டிவைக்கிறதாயும் அதனால் அவற்றின் விலை ஏறிவருகிறதென்றும் அரசாங்கம் தெரிகிறது. பர்மாவிலிருந்து கப்பல்கள் வரத்துக் குறைவதினால், அங்கிருந்து வழக்கமாக வரும் அளவு நெல் வரக்கூடியதில்லையென்றும் கட்டிவைக்கும் நெல்லை பின்விலையேற்றி விற்கலாமென்றும் எண்ணி அப்படிச்செய்வதாயும் தெரிகிறது. கப்பல் வரத்துக் குறைவு கொஞ்ச நாளைக்குத்தானிருக்கக்கூடும். பர்மாவில் அதிகமாக இருக்கும் நெல்லும் இங்கேயே விற்பனையாகித்தீரும். இங்கும் சென்ற வருடத்தைக் காட்டிலும் 12.5 சதம் அதிகம் விளைந்து மகசூல் வந்துகொண்டுமிருக்கிறது. சீக்கிரம் சென்னைக்குப் பர்மாவிலிருந்து நெல்லைக் கொண்டுவந்து, அந்த நெல்லையும் மற்றும் இடங்களிலிருந்து வரும் நெல்லையும் மேலக்கரைக்கு இருப்புப்பாதை மூலம் அனுப்பிவிக்கிறதென்றும் அரசாங்கம் யோசனை செய்து, அதற்கான கப்பல்களுக்கும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

விபசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதைத்தடுக்க அரசாங்கத்திற்குப் பிரியமில்லை; என்றாலும், வியாபாரிகள் இப்படிக்கட்டிவைத்து விலையையுயர்த்துவதில் தலையிடப் பின்வாங்காது. ஒவ்வொரு இடத்திலும் இருக்கக்கூடிய தானியங்களின் அளவையும் அரசாங்கம் தெரிந்துகொண்டிருக்கிறது. அவசியமானபோது, இதுவரை இருந்து வருவதுபோல் சும்மாயிராமல், விலையேறுவதைத் தடுக்கவும் செய்யும்.

Press Communique No. 24.

5. பர்மாவிலிருந்து மேலக்கரைக்காக சில அரிசிக் கப்பல்கள் வந்திருக்கின்றன. இன்னும் பல வரும்.

Press Note No. 48.

நொய்யரிசிக் குவிதிக்கப்படும் இறக்குமதி வரியை இந்த வருடத்திற்கு நீடிப்பதற்கில்லை என்று வியாபார மெம்பர் சர். ஆ. இராமசாமி முதலியார் டில்லி சட்டசபைக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். இதைச் சாதகமாகக் கொண்டு வியாபாரிகள் அரிசி விலையை உயர்த்தக் கூடாதென்றும் அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார். கூட்டுறவு.

6. பர்மாவும் நம்மிந்திய அரசாங்கமும் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தப்படி அரிசிக்கும் நொய்யரிசிக்கும் பர்மாவில் ஏற்றுமதி வரியும் நம் நாட்டில் பிற நாட்டிலிருந்து வரும் அரிசிக்கு வரி விதிக்காதவரை இறக்குமதி வரியும் விதிக்கக்கூடாது. நம் நாட்டில் நொய்யரிசிக்கு வரி விதித்தால், பிற நாட்டு நொய்யரிசியின் வரிக்கும் 10 சதம் குறைத்து பர்மா நொய்யரிசிக்கு விதிக்கவேண்டும்; பிறநாட்டரிசிக்கு அதற்குக் குறைவாகவே விதித்தால், பர்மா நொய்யரிசியின் பேரில் வசூலாகும் வரியை பர்மாவிற்குத் திரும்பக்கொடுத்துவிடவேண்டும். மெயில்.

7. வங்காளக் கடைகள் காரியாலயங்கள் சட்டம் (The Bengal Shops and Establishments Act) ஏப்ரல் 1ௗ முதல் காளிக் கட்டத்திலும் (Calcutta) ஹௌராவிலும் (Howrah) அமுலுக்கு வந்திருக்கிறது. அதன்படி கடைகளும் காரியாலயங்களும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரைதான் திறந்திருக்கலாம். வேலைக்காரர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாளும் விடுமுறை யுண்டு.

மெயில்

8. சண்டை யாரம்பித்ததின் பின், நாற்பது இலட்சம் ஏக்கர் அதிகமாகச் சீமையில் சாகுபடி யாகி வருகிறது. மெயில்

9. இந்தியா, ஆத்திரேலியா, நியூசீலந்து தென் ஆப்பிரிக்கா முதலிய கீழ்நாட்டுத் தொகுதியில், நம்மிந்தியா சண்டைக்காக பருத்தி உடைகளைத் தயார் செய்வதென்றும், மற்ற நாடுகள் கம்பளி உடைகளைத் தயார் செய்வதென்றும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றனர். Indian Information.

ஆ. கிராமப் புனருத்தாரண நலதாபனச் செய்திகள்

1. கிராமாந்திர சனங்கள் அக்கறையாகக் கிராம விருத்தி வேலைகள் செய்து வருவதை உற்சாகப் படுத்துவதற்காகப் பம்பாய் அரசாங்கம் ஒவ்வொரு சில்லாவிலும் ஒரு கிராமத்திற்கு ரூ 100 பரிசு கொடுத்து வரத் தீர்மானித்திருக்கிறது. நடப்பு வருடத்தில் சென்ற 1940 ம் வருட வேலையை வைத்துப் பரிசு கொடுக்கப்படும்.

கிராமத்தில் வசூல்செய்யும் தொகையுடன் பரிசுத்தொகையையும் சேர்த்துக் கிணறு, தண்ணீர்த் தொட்டி முதலிய சௌகரியங்களுக்காகச் செலவழிக்கப் போகிறார்களென்றால், பரிசுத் தொகை பணமாகவே கொடுக்கப்படும்.

கரும்பாலை, கைத்தூம்பு, இரும்புக் கலப்பை, தட்டை வெட்டி முதலியன பரிசுத் தொகையைக் கொண்டு வாங்கிக் கொள்ளப் போகிறார்களென்றால் அப்படியும் செய்து கொள்ளலாம்.

Bombay Information.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. சிறந்த விபசாயக் கூட்டுறவுச் சங்கம் (Better Farming Society) ஒன்று அமைத்துக் கொள்ளுவதால், விருத்தியான முறைகளைக் கையாடவும் குடிசைத் தொழில்களையும் கால்நடைகளையும்விருத்திசெய்யவும்கூட்டாகத் தீவனத்தையும் மற்றும் தேவைகளையும் வாங்கிக் கொள்ளவும் விளைபொருள்களை விற்கவும் கூடும். சிறு பரிட்சார்த்தப் பண்ணைகளில் திருத்தங்களைச் செய்து பார்த்துப் பலன்தரும் திருத்தங்களைக் கையாடவும் செய்யலாம்.

ஆமத்நகர் சில்லா சத்ரால் விபசாயக் கூட்டுறவுச் சங்கம் வாடகைக்காக விபசாயக் கருவிகள் உதவியும் விருத்தியான விதைகள் நவச்சியக் கந்தகை (Sulphate of ammonia) பிண்ணுக்கு வாங்கித் தந்தும் திருத்த முறைகளைக் கையாடத் தூண்டியும் ஒரு வருடம் வேலை செய்து பார்த்ததில், ஐயாயிர ரூபாவரை வரவு செலவின் பேரில் அந்தச் சங்கத்திற்கு ரூ 410 கமிசன் கிடைத்திருக்கிறது.

Bombay Information.

(இப்படி வேலை செய்வதால் விபசாயிகளுக்கும் அதிக வரவு இருக்கலாம். அதன் விபரம் தெரிந்தால் மட்டும், இத்தகைய தகவல்கள் பிறருக்கும் உற்சாகம் அளிக்கக் கூடும். ப-ர்.)

2. (1) அரசாங்க உதவி பெறும் ஒவ்வொரு உயர்தர ஆரம்பப் பள்ளியும் (Higher Elementary School) அடுத்த ஆனி மீ 1-ம் தேதியிலிருந்து, ஏதாவது ஒரு கைவேலைப் பாடம் (One Provocational subject) அவசியம் நடத்தி வரவேண்டும். தவறக்கூடாது.

(2) அந்தக் கைவேலையைக் கற்றுக் கொடுக்கத் தகுதிவாய்ந்த ஆசிரியரொருவரை நியமித்து, அவருக்குரிய போதனை உதவி (Teaching grant) பெற்றுக்கொள்ளலாம்.

(3) மேலும் அந்தக்கைவேலைப் பாடத்திற்குத் தேவையாகும், சாதனப் பொருள்கள் உபகரணங்கள் முதலியவற்றை வாங்கி உபயோகிப்பதிலேற்படும் செலவில் பாதிச்செலவை அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டு, அந்தப் பாதிச் செலவுக்குதவுவார்கள். ஆனால், அந்தச்செலவுத் தொகை ரூ. 100-க்கு மேற்படக் கூடாது.

(4) ஒவ்வொரு பள்ளியிலும் ஒரே ஒரு கைவேலைப் பாடத்துக்குத்தான் போதனை உதவியும், உபகரணங்கள் உதவியும் உண்டு.

(5) கைவேலைப் பாடத்திற்குரிய உபகரண உதவியைப்பெற அடுத்த செப்டம்பர் மீ 1ம் தேதிக்குள் சில்லாக்கல்வி அதிகாரிக்குச் செலவு விபரக்கணக்கு (Bill) அனுப்பி மனுச் செய்து கொள்ள வேண்டும்.

(6) 1942-ம் ஸு பிப்பிரவரி அல்லது மார்ச்சு மாதத்தில் மேலேகண்ட போதனை உதவித்தொகை கொடுக்கப்படும்.

சென்னைக் கல்வி இலாகா சுற்றுத்தரவு.

ஈ. கூட்டச் செய்திகள்

மாயவரத்தில் 5-4-41ல் நடந்த தஞ்சை மிராசுதார்கள் விசேட மாநாட்டில் கீழேகண்ட படிக்கும் இவற்றையனுசரித்து அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கக் குறிப்பொன்று தயாரிக்கவும் மே. த. கவர்னரிடம் தூது போவதற்கேற்பாடு செய்யவும் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

க. (அ.) அரசாங்கம் சாதாரணமாகக்கடன் வாங்கிச் செய்ய வேண்டிய செலவுகளை நடப்பு நிலவரி வருமானத்திலிருந்து செய்வது மிகவும் ஆட்சேபகரமான காரியமென்றும் அந்தப்பிசகான முறை இதுவரை பெருங்கேடுகள் எல்லா வரி செலுத்துவோருக்கும் விசேடமாக இரயத்துவாரி சுவான்தார்களுக்கும் விளைவித்திருப்பதோடு பின்னும் விளைவிக்கக் கூடுமென்றும்,

(ஆ) விற்பனைவரி மதுவிலக்கால் வரும் நட்டத்திற்கு ஈடு செய்யவும் அவசியமாகவும் அவசரமாகவும் நியாயமான அளவிற்குக் குறைக்கவேண்டியதாகவும் விதிக்கப் பட்டிருக்க, அந்தத்தொகையை வேறு காரியங்களுக்காகச் செலவிடுவது நியாயத்திற்கும் நிருவாகப் பணப்பொறுப்பிற்கும் விரோதமானதென்றும்,

(இ) நிலவரிப் பாதுகாப்பு நிதி என்று ஒன்று தற்காலம் எதிர்பார்ப்பதற்கில்லாத அரசாங்க தேசத்தேவைகள் செலவுகளுக்கென்று ஒதுக்கிவைக்கும் யோசனை பின்னும் பெரும் மோசங்களுக்கு இடந்தரக்கூடிய நயவஞ்சகமான ஏற்பாடென்றும் (providing the thin end of the wedge) அதனால் ஏழை வரி செலுத்துவோருக்குப் பெருந்தீங்கு விளையக் கூடுமென்றும் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

உ. அ. மேல். க. (அ) தீர்மானத்தில் கண்டபடி, சாதாரணமாகக் கடன் வாங்கிச் செலவழிக்க வேண்டியதும் 1941—42ம் வருடத்திய சென்னை அரசாங்கத்திட்டத்தில் மின்சாரத் தலைப்பில் காட்டியிருப்பதுமான 45 இலட்ச ரூபாவும்,

மேல். க (இ) தீர்மானத்தில் கண்டிருப்பதும் இதுவரை அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் காணுததுமான நிலவரி பாதுகாப்பு நிதியின் தலைப்பில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் 36 இலட்ச ரூபாவும்,

1941-42ம் வருடத்திற்கு வசா செய்திருப்பதுடன் சேர்த்து 156 இலட்சமாக எல்லா ஜில்லாக்களுக்கும் வசா செய்ய வேண்டுமென்றும் இப்படியாக இரயத்துவாரி சுவான்தார்கள் பேரில் இதுவரை சுமத்தி வந்த அநீதிகளுக்குப் பரிகாரமாக இது முதலேனும் திட்டமாகவும் நிரந்தரமாகவும் குறைந்த பட்சம் இவ்வளவேனும் நிலவரியைக் குறைத்து வருவதற்குறுதியாக, இந்த வருடமே அப்படிச் செய்ய வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

ங. அதிகமழையால், நடப்புப் பசலியில், நில வரித்திட்ட அறிக்கைகளில் (Settlement Reports) கண்டிருக்கிற படிக்கும், கணக்கிட்டிருக்கிறபடிக்கும் தசகூலிச் செலவுகளுக்குக் கூட விளைந்திராத நன்செய்நிலங்களின் தீர்வை பூராவையும் வசா செய்ய வேண்டு மென்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

மிராசுதார்.

---

12. அறிவுரைத் திரட்டு:

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்

1. பொதுசன அபிப்பிராயம் பொதுவாகக் கிராமக் கைத் தொழிலியக்கத்தில் அக்கறை கொண்டதாக இல்லை; சில சமயம் அதற்கு நேர் விரோதமாகவு மிருக்கிறது. நல்ல புத்திசாலிகளுங்கூட இந்த இயந்திர யுகத்தில் கிராமக் கைத்தொழில்களைப் புதுப்பிக்கக் கூடிய தில்லை யென்கின்றனர்.

கிராமக் கைத்தொழில்களோ பல; அவற்றை முறையாக விருத்தி செய்வதற்கான பிர

யத்தனமும் கிடையாது; அவற்றைப் பற்றிய திட்டமான தெளிவான தகவல்களும் கிடைப்பதில்லை. ஆகையால், நாம் புதிதாகவே ஏதொன்றையும் செய்து பார்த்து அனுபவம் சேகரிக்க வேண்டிய திருக்கிறது.

எதொரு தொழிலும், அந்தத் தொழில் விருத்தியாகச் செய்யப்பட வேண்டுமென்றால், அதற்கான திறமை வாய்ந்திருப்பதோடு அது திட்டமாகப் பலிதமாகக்கூடுமென்ற நம்பிக்கையுமுடைய ஆணும் பெண்ணும் அதிலீடுபட வேண்டும். அரசியல் துறையில் தொண்டர்கள் பலர் இருக்கின்றனர்; ஆனால், அவர்களுக்கு இப்படித் தொழில்களிலிறங்கி வேலை செய்ய மனமிருப்பதில்லை; நேர மிருப்பதில்லை; பணமிருப்பதில்லை; செல்வாக்கிருப்பதில்லை; அனுபவமும் இருப்பதில்லை.

இப்போதிருக்கும் தொழிலாளிகளைக் கொண்டே அந்தந்தத் தொழில்களை அங்கங்கே விருத்தி செய்யக் கூடாதா வென்றால் அவர்களுக்கும் போதிய பணமிருப்பதில்லை; அவர்கள் செய்யும் சரக்குகள் விலையாவது மில்லை. அவர்கள் செய் பொருள்களுக்குப் போட்டியாக ஆலைப் பொருள்களும் குவிந்து விடுகின்றன.

பணமாற்று விகிதங்களும், நாணயச் செலாவணியும், இருப்புப்பாதைத் தீர்வை விகிதங்களும், மலங்காட்டுச் சட்டங்களும், வரிகளும் இவை போன்றனவும் கிராமத் தொழில்கள் விருத்தியாவதற்குத் தடையாக இருக்கின்றன. இவை சம்பந்தமாக அரசாங்கமே வேண்டும் சௌகரியங்கள் செய்யக்கூடும்; மற்றவர்கள் பிரயத்தனத்தால் எதுவும் பிரயோசனப்படுவதில்லை. (அரசாங்கம் இவற்றைப்பற்றியெல்லாம் இது வரை அவ்வளவாகக் கவனித்தது மில்லை; இப்பொழுதும் கவனிக்கக்கூடியதாயில்லை. ப—ர்)

அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்க அறிக்கை, 1939.

2. நம் நாட்டில் மட் பாண்டங்கள் நவீன முறையில் செய்வதற்கான சௌகரியங்கள் பலவு மிருக்க, அவற்றை நாம் உபயோகியாது வெளிநாடுகளிலிருந்து வருடத்திற்கு 39 இலட்ச ரூபாவுக்குச் சாடிகள் முதலியன வாங்கிக் கொண்டிருப்பது பெரும் வெட்கக்கேடாக இருக்கிறது.

Industry.

3. நம் மாகாணத்தில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிற பிரதேசங்களில் சோளம் சாகுபடி செய்ததற்குப் பின்னால் சாகுபடி செய்யப்படுகிற பருத்தியின் விளைவு குறைவாக இருப்பதாகவும், ஆனால் கரும்புக்குப் பிற்பாடு சாகுபடி செய்யப்படுகிற பருத்தி அப்படியாகப் பாதிக்கப் படுகிறதில்லை யென்றும் தெரிய வருகிறது.

The central cotton committee.

4. கோதுமைக்கும் கரும்புக்கும் சாதாரணமாகச் சமுசாரிகள் பாய்ச்சும் கிணற்றுத் தண்ணீரில் பாதியே பாய்ச்சி நல்ல மகசூலும் காண்பிக்கப்பட்டது.........பருத்திக் காயைத் துளைக்கும் (Pink boll worm) செம்புழுவினால் ஏற்படும் சேதத்தைத் தடுப்பதற்காக, விதைக்கு முன் விதையை வெய்யிலில் காயப்போட்டு விதைக்கப் பட்டது. அதனால் அந்தப் புழு விழவே யில்லை.

The Director of Agriculture, Thalawar State.

5. பாடமிட்ட பசும்புல்: அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பனிக்காலத்தில் புல்பூண்டு வளராது. இக்காலத்திலும் பசுக்களுக்குப் புல் பசுமையாகத் தர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 8 அடி குறுக்களவும் 25 அடி உயரமும் உள்ள இரும்புப் பீப்பாய்களில் பசும் புல்லை நிறைத்து உலர்ந்த பனிக்கட்டியைக் (இஃதொருவகை) கொட்டி விடுகிறார்கள். இந்தப் பனிக்கட்டி ஆவியாக மாறி உள்ளிருக்கும் காற்றை வெளியேற்றி, புல்லை அழுகாதபடி காக்கிறது. காற்று வெளியேற வெளியேறப் பீப்பாயின்மேல் மூடி, உட்சென்று புல்லை அமுக்கி வெளிக் காற்று உட்புகாதபடி செய்கிறது. ஒரு தன் (Ton) புல்லை இப்படிக் காப்பாற்ற ரூ 4 ஆகிறதாம்.

வர்த்தக ஊழியன்.

6. மரச்சாம்பல்: சாதாரணமாக, மரச்சாம்பலில் 11 சதமானம் சாம்பரசச் (Potash) சத்து இருக்கும். ஆனால், வீடுகளில் எரிக்கும் மரத்தின் சாம்பலில் இவ்வளவு அதிகமான சாம்ப ரசச்சத்து இருப்பதில்லை. வீட்டிலெரிக்கும் மரம் வளர்ந்த பூசாரத்தை யொட்டி, இச்சத்து அதன் சாம்பலில் குறைவாகவும் கூடுதலாகவும் இருக்கிறது. வீடுகளில் விழும் சாம்பல்களில் கரிக்கலப்பு அதிகமாக இருப்பதால், அதில் சாம்பரசச் சத்து குறைவாகத்தான் இருக்கும். விஞ்ஞான இலாகாவில் சில சாம்பல்

களைப் பரிட்சித்துப் பார்த்ததில் அவற்றில் 60 சதம் சாம்பரம் அடங்கி யிருப்பதாகச் சொல்லுகின்றனர்.

சாம்பலை எப்பொழுதும் திறந்த வெளியில் போட்டு வைக்கக்கூடாது. மழையில் நனைந்தால், சாம்பலில் உள்ள 4 முதல் 6 சதமானச் சாம்பரம் 2 சதமானமாகக் குறைந்து விடும். மரச்சாம்பலில் அதிகமாகவுள்ள சுண்ணும்புக் கரிகை (Carbonate of lime) புதிதாக எரிக்கப்பட்ட சாம்பலில் 70 சதம் வரையிருக்கும்.

ஆகையால் மரச்சாம்பல் உரம் சுண்ணும்புச் சத்து குறைவாகவுள்ள நிலங்களுக்குப் போட்டால் தான் ஏற்றுக்கொள்ளும்.

அது போலவே, சுண்ணும்பு தேவையுள்ள சிற்சில பயிர்களுக்குத்தான் ஏற்றுக்கொள்ளும். உருளைக்கிழங்குக்கு இதைப்போட்டால் கிழங்குகள் முண்டும் முரடுமாகப் போய் விடும்.

சுண்ணும்புக் கரிகைச் சத்துடன் மரச்சாம்பலில் சுமார் 2 சதமானம் எரிகைக் காடி (Phosphoric acid) இருக்கிறது. ஆனால், அது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பயிர்களுக்கு உதவும்.

மழையில் நனையாத மரச்சாம்பலாயிருந்தால், ஏகருக்கு 1200 இராத்தல் முதல் 1500 இராத்தல் வரை போடலாமென்று சொல்லப்படுகிறது. இதன் மூலம் 60 அல்லது 70 இராத்தல் சாம்பரம் 600 முதல் 1,100 இராத்தல் சுண்ணும்புக் கரிகை (Carbonate of lime), 24 30 இராத்தல் எரிகைக்காடி கிடைக்கும்.

வர்த்தக ஊழியன்.

7. கரிமவுரம் (organic manure) ஏற்றுத நிலங்களில் விளைவனவற்றை உண்ணும் மனிதர்களும் தின்னும் மிருகங்களும் திடத்திலும் சுகத்திலும் குறைவடையக் காண்கிறோம்; ஆதலால், நாம் சிறந்ததர உணவைப் பெற வேண்டுமேயானுல், நம்முடைய நிலங்களுக்குக் கரிமவுரமும் ஏற்றவேண்டும். நம்முடைய நிலங்களுக்கு மக்கு (humus) ஏற்றுததாலோ, அதை முறையாகச் செய்யாததாலோ அல்லது செயற்கை உரங்களை (artificial fertilisers) மிகுதியாகச் சேர்த்து வருவதாலோ அப்படி நிலங்களில் விளையும் உணவுப் பொருள்களை உண்டுவரும் நமக்குப் பிணிகள் வளர்ந்தும் வருகின்றன. கலப்புரம் compost) அல்லது மக்கு நிறைந்த கரிமவுரங்களிடப்படும் நிலங்களில் விளையும் தானியங்களையும்பயறுகளையும்உண்டு வருவதால், நம்முடைய திடமும்சுகமும் வளரவும் செய்கின்றன; பிணிகள் நம்மையணுகாதபடி தடுக்கும் சக்தியும் நமக்குஅதிகமாகின்றன.

கலப்புரம், குப்பை கூளம் சாணி நரகல் முதலியன கலந்த உரம். மக்கு, குழைதழை நிறைந்த உரம்.

கலப்புரத்தால் செடிகளுக்கு முக்கியமாக வேண்டிய சுண்ணம், எரியம் முதலியனவும் மக்கும் நிரம்பக் கிடைக்கும். நிலத்தில் மக்கு நிறைந்திருப்பதற்குத் தக்கதாக, நிலம் அதிக ஈரத்தையும் தாங்கி நிற்கும்.

British agriculture.

8. ஒரு பயிரின் விளைவை அதிகப்படுத்துவதுடன் அதன் விளைவு காலத்தையும் ஒருங்கே சுருக்குவது ஒரு சமுசாரிக்கு இரட்டிப்பான இலாபமல்லவா?

சில வருடங்களாக இ. சி. 593 தினுசு கேழ்வரகு நல்ல மேனி கண்டு வருகிறது; ஆனால் விளைவுகாலம் கொஞ்சம் அதிகப்படவே செய்கிறது. சமீபமாக இ. சி. 3517 என்ற தினுசு முந்திய தினுசைக் காட்டிலும் 24 சதவீதம் அதிக மேனியும் காண்கிறது; 10 நாளைக்கு முன்னதாகவே விளைந்திடவுஞ் செய்கிறது; அம்மட்டில் இறைவைச் செலவும் சிரமமும் மிச்சமாகின்றன. அதனைக் கோயம்புத்தூர், கரூர், முசிரி, காளாத்திரி, அரக்கோணம், காஞ்சிபுரம், செங்கற்பட்டு, சைதாப்பேட்டை தாலூகாக்களில் பயிரிட்டுப் பார்த்ததிலும் 11 முதல் 35 சத வீதம் அதிக விளைவு கண்டிருக்கிறது.

அதிகமாக விளைவதொன்றே நல்ல வித்தின் குறியாகமாட்டாது; நன்றுகப்பக்குவப் படுத்துவதற்குத் தக்கதாக அதிக மேனிகாண வேண்டும். நாறுகளைக் காலாகாலத்தில் பிடுங்கி, நன்றுகப் பக்குவப்படுத்திய நிலத்தில் நட்டு, அவசியமான காலங்களில் தண்ணீர் பாய்ச்சி வந்ததில் பயிரும் முறுக்காக வந்தது. 1·24 ஏக்கர் பயிரின் கதிரைப் பொறுக்கியடிக்க, ஏக்கர் 4075 இராத்தல் மேனி கண்டது. இதற்கு முன் இ. சி. 593 மத்தியப் பண்ணையில் அதிக மேனி கண்ட 1934-35ம் வருடத்திலும் 3660 இராத்தலும் இந்த வருடத்தில் 3734 இராத்

தனுமே கண்டிருக்கிறது. வெளியூரில் அதிக மேனிகண்ட குடியாத்தத்திலும் 3882 இராத்தலே கண்டிருக்கிறது. உடுமலைப்பேட்டை முட்டிக்கேப்பையிலிருந்து இந்தப் புது தினுசு இ. சி. 3517 விருத்தி செய்யப்பட்டது. கதிர்கை முட்டிபோலிருப்பதால், அஃது அப்படி அழைக்கப்படுகிறது.

சென்னை விபசாய இலாகாத் தலைவர்.

ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்

1. எந்த நாடு தனது விபசாயத்தைப் பெருக்கிவருகின்றதோ அந்த நாடு எத்தகைய கொடிய பணப் பஞ்சத்திலும் சுகமாக வாழக்கூடும்.

விபசாயம் மிகவும் மேலான நிலைக்கு வர வேண்டுமென்பதே எனது பெரு விருப்பமாகும். மண்ணைப் பொருட்படுத்தாத மாந்தர் மடிந்தொழிய வேண்டுபவரே யாவர். நிலம் ஒரு தாய்க்கு ஒப்பாகும். அதனை நாம் புறக்கணிப்போமாயின், அது நமக்கு நீங்காத் துன்பங்களை உண்டாக்கிவிடும், ஆதலின், நிலம் என்னுந்தாயை நாம் பேணி வளர்த்தல் வேண்டும்.

முசோலினி

('இலமேன் றசைஇ இருப்பாரைக் காணின்,
நிலமேன்னும் நல்லாள் நகும்,'

என்னும் நந்தமிழ் நாட்டுப் பெரும் புலவராகிய திருவள்ளுவரின் கூற்று இங்கு உய்த்துணரத்தக்கது. ப-ர்)

2. நாம் பொதுப் பணத்தை யாவற்றினும் மேலாகக் கருதுதல் வேண்டும். அது மழையைப் போல வானத்தினின்று இறங்குவதன்று; இயந்திரத்தைச் சுற்றுவதினால் வருவதுமன்று. அப்பணம் வெய்யிலில் மண்டை வெடிக்கவும் கால்கள் கொப்பளிக்கவும் நின்று வயல்களில் வேலை புரியும் உழவர்களுடையது; இரத்த வெயர்வை சொட்டச் சொட்டக் காற்றில்லாத் தொழிற்சாலைகளில் வேலை புரியும் ஏழைத்தொழிலாளருடையது.

முசோலினி

3. சமூகம் உயர்ந்தால், நாடு உயரும். அனைவரும் ஒருமனப்பட்டு வேலை செய்யின் நாடு உயருமே அன்றித் தனிப்பட்டவனால் ஒரு நாளும் உயராது.

முசோலினி

4. எவன் தன் கொள்கையை நிரூபிக்கத் தன் உயிரையும் இழக்கத் தயாராயுள்ளானோ, அவனே உண்மை வீரன். தேச சரித்திரத்தைத் தன் விருப்பம் போலத் திருப்பியமைத்தல் அவனால் இயலும்.

முசோலினி

5. மாணவர் நாட்டுப்பற்று நிறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்; விபசாயம், இரசாயனம், தேகப்பயிற்சி, சிக்கனம், பொருளாதாரசாத்திரம் முதலிய வாழ்க்கைக்கு இன்றியமையாதவற்றைஅறிந்தவர்களாக இருத்தல் வேண்டும்; மதபோதனை அறிந்து சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.'

முசோலினி

6. பால் விற்பனையில் கிடைக்கும் தொகைக்கு முக்கால் வாசிக்குள்ளாக பால் மாட்டைக் காப்பாற்றுஞ் செலவு அடங்குமென்றால், பால்மாடு வளர்ப்பதில் இலாபமுண்டு, அதிகப் பால் தரும் பசுக்கள் குறையப் பால் தரும் பசுக்கள் தின்னும் தீனிக்கு வெகு அதிகமாகத் தின்பதில்லை. ஆகையால் அதிகப் பால் தரும் பசுக்களினால், அதிகமாகவும் மீந்தும். ஒவ்வொரு பசுச்சாணமும் கோமயமும் மாதம் அரை ரூபாய் முதல் ஒரு ரூபா வரை எரு முட்டையாகவோ உரமாகவோ விலை போகும். கன்றும் விருத்தியாக ஆக அதிக விலை பெறுவதாகும். செத்த பசுவின் தோல் எலும்பு முதலியனவும் விலையாகக் கூடியனவே.

Industry.

இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனை முறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

1. நம் காலத்தில் யதேச்சாதிகாரம் செய்யும் நாடுகள் மாதிரியாகத் தங்களுக்குச் சாத்தியமான சகல சௌகரியங்களையும் பயன் படுத்தியும், வெகுவாகப் பிரசாரஞ் செய்தும் சாதாரண சனங்கள் கடைப்பிடித்து வரும்படி யாகச் சுமத்தப்படும் எந்தக் கல்வித்திட்டமும், எந்தக் கொடியின்கீழ் பரப்பப்பட்டாலும் அது ஜனங்களுக்குப் பிரீதியானதா யிருந்தாலுமே- சனங்களின் போக்கிற்கேற்றதாய் அதனோடு முற்றிலும் படிந்ததாயிருந்தாலன்றி, அதனை வைத்து வெகுகாலம் வேலை செய்திடவு முடியாது; அதனால், நாட்டிற்குச் சரியான நன்மை ஏற்படவுமாட்டாது. கல்வியதேச்சாதிகாரிகள், சனங்களின் போக்கைக்கருதாதும் அதை மக்கி னப்படுத்தியும் தங்கள் பிரியம் போலெல்லாம் தங்கள் மனதுக்குத் தோன்றியபடி யெல்லாம் செய்யுங்காரியம், அவர்கள் விருப்பு வெறுப் பாகிய நழுவித்தள்ளும் அடிப்படையின் மேல், கட்டடம் கட்ட ஆரம்பிப்பதேயாகும். அது சனங்களிடையேயுள்ள சுயசங்கற்ப சுயாட்சி ஊக்கம் விருத்தியாவதற்கும் வினையாகமுடியும்.

(Indian Adult Education Hand book.
J. B. Raju.

2. இந்தியிலும் மராத்தியிலும் வழங்கும் நாகரி எழுத்துக்கள் மற்றும் சில எழுத்துக்களை விட எளிதானவை; என்றாலும், தமிழெழுத்துக் களைப் போலவோ உருதுவில் உபயோகிக்கும் எழுத்துக்களைப் போலவோ அவ்வளவு எளி தானவையல்ல.

(Indian Adult Education Hand book.)
Dr. Frank Lanbach.

3. இந்தியமொழிகளில் தற்காலத்திலும் எண்ணிறந்த பழைமையான இலக்கியங்க ளிருப்பதில், அழகிலும் சிறப்பிலும் பல வேறு வகையிலும்—அளவிலுமே, ஆரியத்திற்கு அடுத்தபடியான பெருமையுற்றிருப்பது, தமி ழிலக்கியமொன்றே யாகும்.

ஆதி காலத்தில் தமிழிலக்கியம், தான் தனித்தும் விளங்கக்கூடிய கௌரவத்தைக் காப்பாற்றியே வந்திருக்கிறது; பின், ஆரியத் தோடு மிகமிக நெருங்கிப் பழகிய சகவாசத் தால், அதைச் சற்றே நெகிழ விட்டிருக்கிற தென்றாலும், அந்த அந்நியச் செல்வாக்கிற் குத் தன் வசமொழிந்தடங்கிப் போகாமலும் தன்னியற்கைச் சுத்தத்திற்குப் பழுது வரா மலுமே, அதைத் தழுவி வந்திருக்கிறது.

(Modern Review) Nalini Mohan Sanyal.

ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

நமது தமிழ்ச்சமுதாயம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகம் பொருந்தி, செல்வக்கலையணிந்து, சீரோங்கி விளங்கியது. தமிழ் மகள், புலவர் நாவிலும் மன்னர் மன்றி லும் மக்கள் அன்பிலும் அருட்பெருமையுடன் விளங்கினாள். தமிழர் உலகின் தொல்மரபினர்; தமிழ் தொன் மொழி. தமிழ் மொழி ஆயிரங் கலைச் செல்வமணிந்து நிலவிய திருமொழி; தமிழ்த்தாய், கடவுள் மணமும் கடவுட் பொலி வும் கடவுளன்பும் கடவுள் வீறும் கடவுட்செல் வமும் ஓங்கிய மொழியரசு. தமிழர் சிற்பத் தேர்ச்சி, ஒவ்வொரு ஆலயத்துள்ளும் பேசுகி றது. தமிழரின் கவிப்புலமை, சிலப்பதிகாரம், திருக்குறள், இராமாயணம், சிந்தாமணி, பெரிய புராணம் இவற்றின் உள்ளத்தினின்று, இன்ப வெள்ளமாகப் பாய்கிறது. தமிழரின் இசை வளமோ, தேவார திருவாசகங்களிலும் ஆழ்வா ராதிகளின் பாசுரங்களிலும், என்பும் உருக அன்புக்கனலாகப் பரவி உள்ளத்தை அள்ளுகி றது. நமது கடவுட் புலவர், தமது ஆர்வத்தை இசை பெருகும் இன்பத்தமிழ் வெள்ளமாகப் பாய்ச்சினார்! சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில், தமிழிசையும் அரங்காடலும் கூத் தும் அக்காலத்திற் பெற்றிருந்த செழுமை நன்கு புலனாகும்.

தமிழர் தமிழ்க்கடலைக் கடைந்து, புதிய புதிய இன்பக்கலைகளைக் காண வேண்டுமென்பதே ஆண்டவன் திருவுளம் போலும்! இனிப் பழைமை பேசிப் பயனில்லை. பழைமையால் ஒரு ஊக்கம் பிறக்கக்கூடும். ஆனால், புதிய கலை வளர்ச்சியில் முனைந்தாலே தான் தமிழை உண்மையாக முன்னேற்ற முடியும்.

தமிழில், தேவாரம் திருவாசகம் திருவாய் மொழி தாயுமானவர் திருப்புகழ் இராமாயணக் கீர்த்தனங்கள் அருள்வள்ளலார் பாடல்கள் தற்காலப் புலவர் பாடல்கள் முதலிய பல இலக்கியச் செல்வங்கள் உள்ளன. தமிழ்ச்செல்வம் மென்மேலும் பெருகவேண்டும். தமிழ் வற்றுப் பாலூற்று. அவ்வூற்றைப் புதுக்கலை வளரப் பாய்ச்சுவோம். தமிழ் மொழியின் பழம் பெருமை மற்றெம்மொழியினும் பெரிதெனினும், தற்போது தமிழ் படும் சிறுமையும் மற்றெம்மொழியினும் பெரிதாகவே யிருக்கிறது. இரு நிதிச் செல்வத்தை வைத்துக்கொண்டு நம்மை ஏற்றி மிதிப்போன் வாயிலில் ஐயம் புகுவது போன்றது, தமிழர் தமிழைப் புறக்கணித்து, பிற மொழிகளில் மோகங்கொண்டிருத்தல். தமிழை இன்னும் ஆயிரம் வகையாக வளர்த்து, உலகம் தமிழருமையை வணங்கச் செய்தல் வேண்டும். பல மொழிகளின் நயங்களையும், சீர்களையும் தமிழுக்கு உரிமையாக்கித் தனித் தமிழ்ச் செல்வத்தைப் பெருக்க வேண்டும். அதற்கேற்ற கடவுட் புலமையாளரும் அருட்கவிகளும் இன்னும் நம்மெதிரேயுள்ளனர். ஆனால், அவர்களை அறிந்து போற்றுவாரிலர்.

"வானுறு மதியை யடைந்ததுன் வதனம் ;
வையக மடைந்ததுன் கீர்த்தி ;
கானுறு புலியை யடைந்ததுன் வீரம் ;
கற்பக மடைந்த நின் கரங்கள் ;
தேனுறு மலராள் அரியிடஞ் சேர்ந்தாள் ;
செந்தழல் புகுந்ததுன் மேனி ;
யானுமென் கவியும் எவ்விடம் புகுவோம்
எந்தையே நந்திநா யகனே !"

என்னும் கதிக்கு இன்று தமிழ் வந்து கொண்டிருக்கிறது. நாளை எப்படியாமோ! ஆதலின் தமிழ் தமிழ் என்று அல்லும் பகலும் உயிர்த்தல் ஒவ்வொரு தமிழன் கடமையுமாகும். வங்கச்செல்வி சிங்காரக் கவி வீணையால் மனிதரை மோகப்படுத்துகிறாள். இந்தி இந்தியாவையே வெல்லப்-போ (பார்க். ப-ர்) கிறது; நமக் கடுத்தாற் போலுள்ள ஆந்திரம் வீர விழிப்புற்றுக் கலையும் கவியும், புதுமையும் பெற்று விளங்குகிறது; மராத்தியும் கணக்கற்ற கவிவளம் பொருந்தியுள்ளது. குசராத்தியும் இந்தியைப்போலவே, சீரோங்கிவருகிறது; அனைத்திலும மேனாட்டுவேகம்பரவிவருகிறது.

தமிழ் என்ன செய்கிறது? பழைமை பேசிப் புதுமையை வெல்ல முடியுமா? அவற்றையே பேசிப் பயனில்லை. இன்று தமிழ் சிறுமையுற்றுள்ளது. தமிழைப் பெருமைப்படுத்த வாருங்கள்! தமிழனுக்குக்கதி, தமிழே தமிழகமேயாம். இரண்டையும் கருத்தூன்றிச் செழிப்புறுத்த வேண்டும். எழுக தமிழர்! கவி கலை இசை நாடகம் சிற்பம் சித்திரம் அறிவு தொழில் நாகரிகம் அரசியல் சமுதாய வாழ்வு அனைத்திலும் தமிழர் சிறப்புற வேண்டும். புதுயுகக் குயில்கள் வருக! வசந்தம் மலர்ந்தது!

இளந்தமிழ் வாழ்க!
எந்தாய் வாழ்கவே!!

(நாடகக் கலை) சுத்தானந்த பாரதியார்.

II. அ. மாதா பிதாவை வணங்கு
மற்றும் அவர் சொல்லுக்கிணங்கு
ஆதரித் தவரைப் போற்று
அன்புடனே பணிந்தேற்று

ஆ. மன்னுயிர் நீக்க ஒண்ணாதே
தன்னுயிர் போக்க எண்ணாதே
பின்னுங் கோபம் கொள்ளாதே
பெரியோர் சொல்லைத் தள்ளாதே.

மரிய அற்புதம்

III. 1. பருத்திச்செடியும் பாலுமுள்ளவனுக்குப் பஞ்சமில்லை.
2. எண்ணிப் பார் குடித்தனத்தை; எண்ணுதே பார் வேளாண்மையை.
3. ஒருகால் பார்த்தால் புன்செய் ; இருகால் பார்த்தால் நன்செய்.
4. வரப்பே தலைகாணி ; வைக்கலே பஞ்சு மெத்தை
5. உடையவன் பாராப் பயிர், பயிராகுமா ?
6. கன்னுன் நடமாட, குயவன் குடிபோக.
7. கண்டது கேட்டது சொல்லாதே, காட்டுமரத்தில் நில்லாதே.
8. கடல் தாண்ட மனமுண்டு ; வாய்க்கால் தாண்டக் காலில்லை.
9. கல்லைக் குத்துவானேன் ? கைநோகிறதென்றழுவானேன் ?
10. ஓட்டைக் சட்டியானுலும், கொழுக்கட்டை வேந்தால் சரிதான்.

IV. 1. பொய் மெய்மையையும், கோபம் பொறுமையையும், பாவம் புண்ணியத்தையும் வெல்லமாட்டா.
2. தாமும் கொடாது கொடுக்கின்ற பிறரையுந் தடுக்கும் பாதகர், பயன்படும் மரத்தைச் சூழ்ந்த உடைவேல் முள்ளைப் போல்வர்.
3. மேலோர் தம்முயிரைக்கொடுத்தும் தம்மை அடுத்த நல்லோர்க்கு வந்த ஆபத்தைநீக்குவர்.
4. பைங்க ணரவுக்கு விடம் பல்லளவே ; துர்ச்சனருக் கங்க முழுதும் விடம்.
5. பாம்பும் மணி மந்திரத்தால் வசமாகும் ; துர்ச்சனர் எந்த விதத்தாலு மிணங்கார்.

நீதிவெண்பா

ஓர் விடுகதை

விவசாயத் துறையனைத்தும் விளக்கிவைப்பான்;
விதவிதமாய்க் கைத்தொழிலும் விளம்பிநிற்பான்;
நவதான்யக் "கிராமங்கள்" நகர்க்கும் செல்வான்;
நானென்று "பொதுநலமே" நாட்டுவானே !

இவன் யார் ? கிராம தூதன்.